# கதிர்காமத்தில் பதட்டம் நீங்கி அமைதி நிலவுகிறது

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
வரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
மலர் 11
இதழ்: 134

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-0

யாழ்ப்பாணம் ஆனி 12 ரபி. ஆகி 10 வியாழக்கிழமை [26-6-69

கதிர்காமம், புதன்

கதிர்காமத்தில் சில தினங்களுக்குமுன் இந்து ஆலயம் சம்பந்தமாக எழுந்தபதட்ட நிலை இப்பொழுது தணிந்து மாமூலநிலைமை உருவாகியுள்ளது.

அமைதியை நிலைநாட்ட பொலிசார் விழிப்புடன் கடமை புரிகிறார்கள்.

இதற்கிடையில் கதிர்காமத்தில வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் 14ந்திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. உற்சவத்துக்கான ஏற்பாடுகள் செய்வதில் அரசாங்க அதிபரும் அதிகாரிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

தற்காலிகபொலிஸ் நிலையம் சுகாதாரப் பகுதியினரின் அலுவலகங்கள் அகியவற்றை அமைப்பது பற்றி ஆராயப்படுகின்றது.

தற்காலிகமாக மலசலகூடங்கள் அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

கதிரமலையில் இந்து ஆலயத்தில் இனறும் காவல் இருந்து வருகின்றது அங்கு இப்பொழுது அமைதி நிலவுகின்றது.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை

## ஊழியரை வேலைக்கு திரும்புமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

பரந்தன்ரசாயனதொழிற்சாலையில் கடந்த 10 நாட்களாக வேலைநிறுத்தம் செய்துவரும் ஊழியர்களை வேலைக்குத் திரும்பும்படி நிர்வாகத்தினர் ஒரு வேண்டுகோள் விடுவது பற்றி ஆலோசனை செய்துவருவதாக அறியப்படுகிறது.

தற்பொழுதுள்ள நிலையில் எதுவும் செய்யமுடியாமலிருப்பதால், வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள ஊழியர்களை உடனடியாக வேலைக்கு திரும்பும்படி நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுவார்களென தெரியவருகிறது.

அடுத்தமாதம் 1-ம் தேதி முதல் 51 தற்காலிகஊழியர் நிரந்தரமாக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் சில தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கலாமென்றும் தற்காலிக ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

பரந்தன்ரசாயனதொழிற்சாலையில் மீண்டும் குளோரின் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகிறது. நேற்று முன்தினம் எரிசோடா உற்பத்திசெய்யப்பட்டது எனத் தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை காலை முதல் 'பிளான்ரின்' ஒரு பகுதி இயங்க ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எரிசோடா உற்பத்தி செய்யப்பட்டதாக தற்காலிக ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை வர்த்தக சங்க ஊழியரின் வேலைநிறுத்தம் 10-வது நாளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் இவ்வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாதென்று சம்மேளன உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். கைத்தொழில மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் வேலைநிறுத்தத்தில் இறங்குவது புத்திசாலித்தனமல்லவென்றும் அவர் தெரிவித்தார்.

மாலை 5 மணி முதல் இரவு 2 மணிவரை வழங்கப்பட்டு வந்த மின்சாரம் தற்பொழுது 24 மணி நேரமும் கிடைக்கக்கூடிய ஒழுங்கை நிர்வாகத்தினர் செய்துள்ளனர்.

மாவை ஆலயப்பிரவேச பிரச்னை

# பொலிஸ் சுப்பிரின்டனுக்கு எதிராக சி. சுந்தரலிங்கம் கோர்ட்டில் மனு

## அட்டோர்ணி ஜெனரலையும் கட்டுப்படுத்த கோரிக்கை

நல்லூர், புதன்

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமான எவ்வித நடவடிக்கைகளிலும் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கமும், அட்டோர்ணி ஜெனரல் ஜனப் ஏ. இ. எம். அமீரும் ஈடுபடாமல் கட்டுப்படுத்தும் வகையில் தீர்ப்பு ஒன்றை கோரி முன்னாள் வவனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கம் மல்லாகம் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

அமைதியைக் கெடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்காமல் இருவரையும் உறுதிப்பிணையில் கட்டுப்படுத்துமாறு திரு. சுந்தரலிங்கம் தம் மனுவில் கேட்டிருக்கிறார்.


மாவிட்டபுரத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் முன்னாள் வவனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கத்தைக் கட்டுப் படுத்தும்படி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. சுந்தரலிங்கம் மல்லாகம் கோர்ட்டில் ஏற்கனவே ஒரு மனுவைத் தாக்கல் செய்திருப்பது இங்கு

மல்லாகம் நீதிமன்றத்தின் நீதி பரிபாலன நிர்ணய எல்லைக்குட்பட்டதாய் இந்த தகவலை மேற்படி நீதிமன்றத்தின் ஆணைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

பீக்கிங் பிரிவு கம்யூனிஸ்டுகள், புரட்சிவாதசமசமாஜக்கட்சி, இடதுசாரிகள் மற்றும் இக்கொள்

தல். (இ) 1967-ம் ஆண்டுக்கு முற்பட்ட பல நூற்றாண்டுகளாக இந்த ஆலயத்தில் பரம்பரை கிரமங்கள் பழக்கவழக்க முறைகள் நடைமுறைகள் ஆகியவற்றின்படி பூசைகள், திருவிழாக்கள் முதலாய நைமித்தியங்கள் நடைபெற்றுவருவதனை இவ்வாறு நடை

## சைவமும் தமிழும் தழைக்கப் பிறந்தோன்



நாவலர் சபையிடம்

## கச்சாய் கிராமசபை 500 ரூபா அன்பளிப்பு

கொடிகாமம், வியாழன்


நாவலர் திருவுருவச்சிலை இன்றுகாலை 11 மணியளவில் கொடிகாமம்சந்தையை வந்தடையும்போது கச்சாய் கிராமசபைத் தலைவர் திரு ஏ சிதம்பரப்பிள்ளையும், உறுப்பினர்களும், பொது மக்களும் வரவேற்று மாலை சூட்டி அஞ்சலி செய்வார்கள்,

கச்சாய் கிராமசபையின் சார்பில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையிடம் 500 ரூபா அன்பளிப்பு வழங்கப்படுமென கச்சாய் கிராம சபைத்தலைவர்நேற்றுத்தெரிவித்தார்.

கொடிகாமம் அரசினர் பாடசாலை மாணவ மாணவிகளும், திருநாவுக்கரசு வித்தியாசாலை மாணவ மாணவிகளும் வீதிகளின் இருபக்கத்திலும் அணிவகுத்து நின்று அஞ்சலி செலுத்துவார்கள். மாணவர்களின் சில கலை நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

கொடிகாமம் அண்ணாமன்றம், கெனடி இளைஞர்கழகம், இளைஞர் முன்னேற்றக் கழகம் ஆகியவையும் இந்த வரவேற்பில் கலந்துகொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவத்துக்கும், தமிழுக்கும் அரும்பெருந் தொண்டாற்றி, அதன்மூலம் தமிழ் நெஞ்சமெல்லாம் கொலுவீற்றிருக்கும் நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை கொழும்பிலிருந்து தேசபவனி புறப்பட்டு, அவர் பிறந்த பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. அச்சிலையின் பொலிவுமிகு தோற்றம் இது.

# நாவலர்சிலை வழியனுப்பு விழாவில் பிரதமர் புகழ்மாலை

## பல்லாயிரக்கணக்கான மக்களின் தரிசனத்துடன் பவனி ஆரம்பம்

கோட்டை, செவ்வாய்

**'ஏகாதிபத்திய வாதிகளின் பிடியிலிருந்த தமிழ் கலாச்சாரத்தையும் இந்து சமயத்தையும் பாதுகாக்க ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. பௌத்த மதத்தை வளர்க்க அநகாரிக தர்மபாலா எவ்விதம் தொண்டாற்றினரோ அது போன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமயத்தையும் கலாச்சாரத்தையும் வளர்க்க அரும்பாடுபட்டார்.'**

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆறுமுகநாவலரின் சிலை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் திரு டட்லி சேனநாயகா மேற்கண்டவாறு கூறினார்.

அந்நியராட்சியில் தமிழ் கலாச்சாரமும் சைவசமயமும் சிக்குண்டிருந்த சமயத்தில் அவற்றுக்கு புத்துணர்ச்சி அளித்து மறுமலர்ச்சி உண்டாக்கிய பெருமை ஆறுமுகநாவலரையே சாரும். என்று கூறிய திரு டட்லி சேனநாயகா தொடர்ந்து பேசுகையில் பிறருடைய மதத்தையும் கலாச்சாரத்தையும் மாசு படுத்தாமல் தம்முடைய மொழியையும் சமயத்தையும் பாதுகாக்க முடியுமென்பதை அநகாரிக தர்மபாலா போன்று உலகுக்குஉணர்த்தியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்றுகூறினார்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்திலிருந்து **ஆரம்பமாகிய நாவலர் சிலை** பவனி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தை அடைந்த போது பிரதமரும், மற்றும் பிரமுகர்களும் நாவலர் சிலைக்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.

ஊர்வலப் பாதைகளெல்லாம் அலங்கரிக்கப்பட்டு, சிலைக்கு வழிநெடுகிலும் பூரண கும்பங்கள் வைத்து வரவேற்புகள் அளிக்கப்பட்டன. அணிவகுத்துச் சென்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் நாவலர்பெருமானின் கீதங்களைப் பாடிக் கொண்டு சென்றனர்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அந்நியராட்சியில் சமய, மொழி சம்பந்தமாகச் சில தீமைகள் ஏற்பட்டிருந்தாலும்கூட, நன்மைகள் ஏற்பட்டுள்ளதையும் மறுக்க முடியாது. சந்திரனில் தற்பொழுது நடைபெறும் விண்வெளிச் சாதனைகளையும் அவர்கள்மூலமே உலகம்அறியக்கூடியதாக இருப்பதை உதாரணமாகக் கூறலாம்.

பிரதமர் சிலைக்கு வெண் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர், மற்றும் அமைச்சர்கள் திருவாளர்கள் சுகததாசா, எம். டி. எச். ஜெயவர்த்தன உபசபாநாயகர் சிவசிதம்பரம் ஜி ஜி பொன்னம்பலம், நீதியரசர் சிவசுப்பிரமணியம் பதில் பிரதம நீதியரசர் எஸ் ஏ. டி. சில்வா திருமதி சேரம் ஜெயலக்ஷ்மி பேர்ஞுட் சொய்சா உட்பட பலர் மாலை அணிந்து அஞ்சலி செலுத்தினர்.

கல்வி அமைச்சர் திரு இரியகொல்லை விழாவுக்கு சமூகமளிக்கவில்லை, இதை கண்டித்து திரு ஜி ஜி பொன்னம்பலம் பேசுகையில் பேச்சாளர்களில் மட்டும்கல்விஅமைச்சர் நின்று விடுகிறார் என்றும் செயலளவில் ஒன்றுமே இல்லையென்றும் கூறினார்,

தமிழும், சைவமும் வளர்ந்த நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் அவசியம் தேவை என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்துகிறேன் என்றும் திரு. ஜி. ஜி. பேசுகையில் தெரிவித்தார்.

---

லிங்கத்தைக் கட்டுப் படுத்தும்படி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. சுந்தரலிங்கம் மல்லாகம் கோர்ட்டில் ஏற்கனவே ஒரு மனுவைத் தாக்கல் செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னுள் வவனியா எம். பி திரு. சி. சுந்தரலிங்கம் தாக்கல் செய்துள்ள தமது மனுவின் முழுவிபரம் பின்வருமாறு:

திரு. சி. சுந்தரலிங்கம் அந்த மனுவில் கிரிமினல் குற்ற ஒழுங்கு நடவடிக்கைச் சட்டப் பிரிவு இலக்கம் 81-ன் கீழ் மல்லாகம் மாஜிஸ்திரேட்டுக்கு சமர்ப்பிக்கும் தகவலாவது:

முதலாவது பிரதிவாதியானவரும் தற்போது யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டனுக கடமையாற்றுபவருமான இராமச்சந்திரா சுந்தரலிங்கம் உத்தியோக சம்பிரதாய உட்போர்வையில் தவருன செய்கைகளைச் செய்வதனுலும் ஈடுபடுவதனுலும் நாட்டின் அமைதிக்கும் மக்களின் சமாதானத்துக்கும் பங்கம் விளைவிக்ககூடியதெனக் கருதி மேற்படி மனுதாரானசெல்லப்பா சுந்தரலிங்கம் ஆகிய நான் றத்தின் ஆணைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

பீக்கிங் பிரிவு கம்யூனிஸ்டுகள், புரட்சிவாதசமசமாஜக்கட்சி, இடதுசாரிகள் மற்றும் இக்கொள்யுடையவர்கள் உட்பட்ட பல்வேறு பகுதியினர்களை உஷார் படுத்துவதனையிட்டும் பலாத்கார முறைகளினுலும் பலாத்கார முறைகளைப் பிரயோகிப்பதாகப் பயமுறுத்துவதனுலும்' சத்தியாக்கிரகம் எனப்படும் செயல்களினுலும் எதிர் வரும் ஜுலை 17ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 15-ம் திகதிக்கிடையிலான காலத்தில் (மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் மஹோற்சவத்தின் போது) இந்த ஆலய உட்பிரகாரத்தினுள் பிரவேசத்துக்குத் தூண்டுதல் செய்கிறர்

(ஆ) மேலே குறிப்பிட்ட கால எல்லையுள் மேற்படி ஆலயத்தினுட் பிரகாரத்தினுள் ஒழுங்காகச்சென்று வணங்கும் கிரமமுடையவர்களை வரையறை செய்யுமுகமாக பலாத்காரமுறைகளைப் பயன்படுத்தி அப்புறப்படுத்துதல் அல்லது அவ்வண்ணம் செய்யும்படி ஆணைபிறப்பித்

பழக்கவழக்க முறைகள் நடைமுறைகள் ஆகியவற்றின்படி பூசைகள், திருவிழாக்கள் முதலாய நைமித்தியங்கள் நடைபெற்றுவருவதனை இவ்வாறு நடைபெருது தடைப்படுத்துதல்.

(ஈ) இந்த ஆலயத்தில் வழமையாகச்சென்று வணங்குபவரும் இவ் ஆலயத்தைச் சுற்றி வாழ்பவருமான சைவ சமூக மக்களுக்கு துன்பமும் இடைஞ்சலும் ஏற்படுத்தும் இன்னேரன்ன பல தகாத செயல்களைச் செய்தல் அல்லது முரண்பாடான செயல்களைச் செய்து துன்புறுத்தும்படி தூண்டுதல். இரண்டாவது பிரதிவாதியாகிய ஏ சி. எம். அமீர் உத்தியோக தோரணையின் உட்போர்வையில் மேற்படி முதலாவது பிரதிவாதியாகிய இராமச்சந்திரன் சுந்தரலிங்கம் என்பவருக்கு உடந்தையாகவும் அவருடன் ஒற்றுமையாகச் சேர்ந்து திட்டமிட்டும் உதவியும் உற்சாகப்படுத்தியும் மேலேசொன்ன நான்கு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்திய செயல்களைச்செய்ய ஒத்தாசையாக இருந்ததினுல் மனுதாராகிய செல்லப்பா சுந்தரலிங்கத்துக்கு அபாயமும் ஆபத்தும் சமாதானத்துக்குப்பங்கமும் ஏற்படும் சூழ்நிலை உருவாகலாம்.

எனவே இருவரையும் கட்டுப்படுத்துமுகமாக ஆணை பிறப்பிக்கவேண்டும். சமாதானத்துக்கு எந்தவகையிலும் பங்கம் ஏற்படாத வகையில் அமைதியைக் கெடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கும் இருவரையும் உறுதிப்பிணையில் பொறுப்பாளர்களுடன் கட்டுப்படுத்தவேண்டும்

இம் மனுமீது மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசுவாமி இருவருக்கும் கட்டளை பிறப்பிப்பதனை இம் மாதம் 26-ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

சாவகச்சேரி ந. சபைக் கிணற்றில்

# 3 மாதத்துக்கு முன் நஞ்சு இப்போது உமி?

மட்டுவில், செவ்வாய்

சாவகச்சேரி நகரசபை வளவிலுள்ள கிணறுஒன்றில் உமி போன்ற அழுக்குப் பொருட்கள் போட்டு அசுத்தப்படுத்தப்பட்டுள்ள தாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மைத்தமிழரால் பாவிக்கப்பட்டுவந்த இத்தக் கிணற்றை அசுத்தப்படுத்தும் விசமச்செயலில் நகரசபையில் கடமைபுரியும் ஒரு சில ஊழியரே ஈடுபட்டுள்ளதாக 9-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஸி. மயில்வாகனம்குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 3 மாதங்களுக்கு முன் இதே கிணற்றில் நச்சுத்திராவகம் ஊற்றப்பட்டிருந்ததாகக் கூறிய 9 ம்வட்டார அங்கத்தவர் இது சம்பந்தமாக ஒரு அறிக்கையையும் வெளியிட்டுள்ளார். இதற்கு உடனடி நடவடிக்கை வேண்டுமென நகரசபைத் தலைவரிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

---

ஆலயபிரவேசம் சம்பந்தமாக

# டி. ஐ. ஜி. மாவை ஆலய ஆதீனகர்த்தாவை சந்திப்பார்

நல்லூர், புதன்

வட பிராந்திய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. டெடிகம நேற்றுக் காலை விமான மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையங்களுக்கு உத்தியோக பூர்வமாக நேற்று விஜயஞ் செய்த திரு. டெடிகம இம் மாதம் 26ந் தேதி கொழும்புக்குத் திரும்பு முன்னர் **மாவை கந்தசுவாமிகோயில்** ஆதீன கர்த்தாவைச் சந்தித்து ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார். இவருடன் வடபகுதிப் பொலிஸ் சுப்பிரின்டனும் செல்வார்.

அண்மையில் குறிப்பிட்ட ஆலயத்தில் உற்சவம் ஆரம்பமாகவிருப்பதால், எவ்வித நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டுமென்று ஆராய்வதற்காகவே திரு. டெடிகம இங்கு விஜயஞ்செய்தார்.

---

# ஆட்சிமன்றக் கூட்டத்தொடர் கலைக்கப்பட்டது

கோட்டை, புதன்

இன்றுடன் ஆட்சிமன்றக் கூட்டத்தொடர் முடிவடைந்தது. கடந்த நள்ளிரவு இதற்கான கவர்னர் ஜெனரலின் அறிவித்தல் வெளியாயிற்று. ஜுலை மாதம் 10-ம் திகதி அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகும்.

நேற்று செனட்சபையில் ஆட்சிமன்றத்தின் கூட்டத்தொடர் முடிவடைவது பற்றிய அறிவித்தலை சபை இலிகிதர் திரு. கொஸ்வத்தை **வாசித்தார்.**

---

சார்பில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையிடம் 500 ரூபா அன்பளிப்பு வழங்கப்படுமென கச்சாய் கிராம சபைத்தலைவர்நேற்றுத்தெரி- கம், இளைஞர் முன்னேற்றக் கழகம் ஆகியவையும் இந்த வரவேற்பில் கலந்துகொள்ளும்.

---

யாழ். மாநகரசபை

# மாதாந்த கூட்டத்திற்கு வரும் பிரேரணைகள்

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் புனித நகராயிருப்பதன் காரணத்தினுல் திருவிழாக் காலத்தில் பொலிஸ் பாதுகாப்பு நடைபெற்றது போல், ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை நேரங்களிலும், மற்றும் முக்கியமான தினங்களிலும் பொலிஸ் கடமையாற்றி அரசடிச் சந்தியிலிருந்து இரண்டாங்கட்டைச் சந்திவரை சைக்கிள்களை உருட்டிச் செல்வதுடன் வாகனங்கள் அப்பாதையால் போவதை தடைப்படுத்த வேண்டுமென பொலிஸ் அதிபரை இச்சபை கோருகிறது

நாளை நடைபெறவிருக்கும் மாநகரசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில், மேற்கண்ட பிரேரணையை கொண்டுவர திரு. அ. நடராசா முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறர்.

திரு. வி சிவசுப்பிரமணியம் கீழ்க்காணும் பிரேரணையைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

கனிஷ்ட தொழில்நுட்பப் பாடசாலை முழுமையாக மாநகரசபை எல்லைக்குள் உள்ளது கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலை கட்டப்பட்டுள்ள காணி 23-ம் வட்டாரத்தில் இருக்கிறதுஎன்பதற்கு முன்னைய சோலைவரிப் பற்றுச்சீட்டுகளும், மற்றும் தஸ்தாவேஜுகளும், அத்தாட்சிகளாகும், எனவே கொக்குவில் கிராமசபையின் அதிகார வரம்பிற்குள் சட்ட விரோதமாகஇருக்கும் மேற்படி காணியைத் திரும்ப எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேயர் எடுக்க வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

மற்றும் 8 பிரேரணைகளுக்குமுன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

---

# 1970-ல் 35,000 பேருக்கு வேலைவசதி கிடைக்கும்

## கூட்டுஸ்தாபனங்கள் ஆர்வம்

கோட்டை, புதன்

அடுத்த நிதிவருடத்தில் கைத்தொழில கடற்ருெழில அமைச்சின் கீழ் இயங்கும் 21 கூட்டு ஸ்தாபனங்கள் 35,427 பேருக்கு வேலைவாய்ப்பளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐவுளி கூட்டுஸ்தாபனம் இலங்கை சிமெந்து கூட்டுஸ்தாபனம் சிறு கைத்தொழிற் கூட்டுஸ்தாபனம் ஒட்டு பலகை கூட்டுஸ்தாபனம் ரயர் கூட்டுஸ் தாபனம் உட்பட வேறு பல கூட்டுஸ்தாபனங்களும் வேலையற்றேருக்கு வேலை வாய்ப்பளிக்கவுள்ளன.

உள்நாட்டு உற்பத்தியல பொருளைப் பெருக்குவதற்கும் வேலையற்ரேருக்கு வேலைவாய்ப் பளிப்பதையும் நோக்கமாகக் கொண்டே இத்திட்டத்தை கைத்தொழில அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தன கொண்டுவந்துள்ளார்.

---

நயினதீவு

# யாத்திரிகர்களுக்கு ஓர் எச்சரிக்கை

நயினதீவு, புதன்

நயினதீவு அம்பாள் ஆலய உற்சவகாலத்தில் கடந்தமுறைநடைபெற்றபடகு விபத்துப்போன்று நடைபெருமல் பாதுகாத்துக் கொள்ள படகுச்சொந்தக்காரர்களுடன் ஒத்துழைக்குமாறு யாத்திரிகர்களுக்கு ஒரு வேண்டுகோளை அனலைதீவு கிராமசபை புதிய உறுப்பினர்கள் விடுத்துள்ளனர்.

இம்முறையும் காற்றும்முரமாக யிருப்பதால் படகுகளில் அவசரப்பட்டு ஏறவேண்டாம் என்றும், நேரத்தைப் பொருட்படுத்தாது பிரயாணத்தை மேற்கொள்ளும்படியும் அவர்கள் யாத்திரிகர்களிடம் கேட்டுக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

எனது பட்டி மாட்டோடு சிவப்புநிற அயலூர் மாடு ஒன்று வந்து சேர்ந்து நிற்கிறது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி எங்க ஊர் விதானையார் மூலம் பெற்றுக் கொள்ளலாம். த. சுப்பிரமணியம், 1-ம் வட்டாரம், அல்லைப்பிட்டி. 1208

### விற்பனைக்கு

காணி

மட்டுவில் வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குரிய, மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலுக்கு முன்புள்ள காணிவிற்பனைக்குண்டு.பரப்பு 4. ரூபா ஆருயிரத்திற்குமேல் கூடிய தொகை கேட்பவருக்கு விற்கப்படும். ஆடி 5-ந் தேதிக்கிடையில் மேற்படி சங்கக் காரியதரிசியுடன்கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். ஆ. வல்லிபுரம், கௌரவ காரியதரிசி. 1209

### விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, புதன்

வடமராட்சி ஆசிரிய சங்கம்பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டி வருகிற மாதம் 12ந் திகதி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு பலாலி பல்கலைக்கழகக்கல்லூரி உப அதிபர் திரு கே.சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதற்கான தெரிவுப் போட்டி வருகிற9ம்,10ந்திகதிகளில் நடைபெறும்.

### சாரணர் பத்திரம் பெறுவர்

வட்டுக்கோட்டை,புதன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சாரணர்களான ஏ. ஆதித்தன், எஸ். இராசலிங்கம், ஈ. ஜெயரத்தினசிங்கம், எஸ். ஜெயகுமாரன் ஏ. அமிர்தலிங்கம் ஆகிய ஐந்து சாரண வீரர்களும் அடுத்தமாதம் 26-ம் திகதி கொழும்பிலுள்ள சாரணர் தலைமைக் காரியாலய மண்டபத்தில கவர்ணர் ஜெனரல திரு. விலலியம் கோபலவாவிடமிருந்து மகாராணியின் சாரணர் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

ஏ.ஆதித்தன், எஸ்.இராசலிங்கம் ஆகிய இரு சாரண வீரர்களும் சென்றவருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாரணர் விழாவின் போது உலகப் பிரதம சாரண சேர் சாள்ஸ்மக்லினியிடமிருந்து மகாராணியின் சாரணர் பட்டிகளைப் பெற்றனர். இவர்களே இக்கல்லூரியில முதலாவது மகாராணியின் சாரணர் குழுப் பட்டத்தைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்வி அறிவித்தல்

1969-ம் ஆண்டுக்கு வட்டார ரீதியாக பொருட்கள் விநியோகத்திற்கு 5-7-69 நண்பகல் 12 மணிவரை பதிவுபெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து இரண்டு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரத்தின் விலையாக ரூபா 5/-ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25/-ம் செலுத்தி 2-7 69 நண்பகல் 12 மணிவரை மாநகர மராமத்து பொறியியலாளரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தின் விலை திரும்பத் தரப்படமாட்டாது

ஏனைய விபரங்களை மராமத்து பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24-6-69. 1622

### புதிய நிர்வாகிகள்

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை மேற்கு பயிர்ச்செய்கைக்குழுவின் புதியநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. நா. சரவணமுத்து, காரியதரிசி: திரு ஆ. துரைராசா, தனதிகாரி: திரு. நா. துரைச்சாமி.

### தேர் விழா

அராலி, வியா.

அராலி மேற்கு ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதேஸ்வர ஆலய தேர்த் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. யாழ். கல்லூரி கனிஷ்ட பிரிவு இசை ஆசிரியர் திரு. தா. பொன்னம்பலம் சிறுத்தொண்டர் கதைபற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நடத்தினர்.

மென்பந்து சுற்றுப் போட்டியில்

# 'யங்லயன்ஸ்' கோஷ்டி இம்முறையும் சாம்பியன்

## காப்டன்லூயிஸ், குலநாதனின் அபாரத் துடுப்படி

யாழ்ப்பாணம், வியா

வடமாகாண மென்பந்து விளையாட்டுச் சங்கத்தினல் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வந்த மென்பந்துச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் 'யங்லயன்ஸ்' விளையாட்டுக் கழகம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

'யங்லயன்ஸ்' விளையாட்டுக் கழகம் 1965-ம் ஆண்டிலிருந்து, யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற மென்பந்துச் சுற்றுப் போட்டிகளில் தொடர்ந்து சாம்பியனுக வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வடமாகாண மென்பந்து விளையாட்டுச் சங்கத்தினல் நடாத்தப்பட்ட இச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில், 'யங்லயன்ஸ்' விளையாட்டுக் கழகத்துடன், ஈச்சமோட்டை 'வளர்மதி மன்றம்' போட்டியிட்டது.

'வளர்மதி மன்றம்' முதல் இன்னிங்ஸில் மொத்தம் 86 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சூரியக்குமார் 26 ஓட்டங்களையும், பேரின்பராஜா 17 ஓட்டங்களையும், சுரேந்திரா 11 ஓட்டங்களையும் பெற்றனர். 'யங்லயன்ஸ்' கோஷ்டியின் பந்தெறி வீரர்களான லூயிஸ் (காப்டன்) 4 விக்கெட்டுகளையும், சண்முகராசா 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

'யங்லயன்ஸ்'. கோஷ்டியினர் தமது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 74 ஓட்டங்களைப் பெற்றனர். இதில், இம்மனுவல் 15 ஓட்டங்களையும், கங்காதரன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். 'வளர்மதி' கோஷ்டியின் பந்தெறி வீரர்களான சூரியகுமார், சண்முகா, ராஜேந்திரா ஆகியோர் முறையே 4, 3, 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

'வளர்மதி மன்றம்' இரண்டாவது இன்னிங்ஸில் மொத்தம் 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி. தெய்வேந்திரா, எம். சுரேந்திரா, தெய்வேந்திரா ஆகியோர் முறையே 19, 17, 15 ஓட்டங்களைப் பெற்றனர். 'யங்லயன்ஸ்' கோஷ்டியினர். 50 நிமிடங்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 88 ஓட்டங்களை மிகவேகமாகப் பெற்று ஓர் சாதனையை ஏற்படுத்தி இப் போட்டியில் வெற்றி பெற்றார்கள். இக்கோஷ்டியின் காப்டன் லூயிசும், குலநாதனும் முறையே 21, 23 ஓட்டங்களை மிக வேகமாகப் பெற்றதே இவர்களின் வெற்றிக்கு மூலகாரணமாக அமைந்தது.

ஆட்டம் முடிவடையும்போது, 'யங்லயன்ஸ்' கோஷ்டியினர் 'வளர்மதி மன்றத்தை' 3 அதிகப்படியான விக்கெட்டுகளால் வென்று சாம்பியனுஞர்கள்.

இப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

## நாவலர் மகாநாடு 3-ம், 4-ம் நாள் நிகழ்ச்சிகள்

முதல் இரு நிகழ்ச்சிகளும் நேற்றைய ஈழநாட்டில் வெளிவந்துள்ளன 3-ம், 4-ம் நாட்களுக்கான நிகழ்ச்சிகள் கீழே தரப்படுகின்றன.

மூன்ரும் நாள் (1-7-69): தொடக்கிவைப்பவர்: பேராசிரியர் வி. செல்வநாயகம்- தமிழ்த்துறைத் தலைவர் இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

**காலை நிகழ்ச்சிகள்**

தலைவர்: திரு. த. முருகேசம்பிள்ளை.

காலை 8-30—9-00 தேவாரம்: வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்.

மு. ப. 9-00 9-10 வரவேற்புரை: திரு. அ. அ. யோசப்.

மு. ப. 9-10 — 9-40 தொடக்கவுரை.

மு. ப 9-40—10-00 தலைமையுரை.

மு. ப. 10-00—11-00 விவாத அரங்கம்: பொருள்- ''நாவலர் உயர்ந்தது சமயப் பணியாலா? தேசியப் பணியாலா?'' தலைவர்- திரு இ சபாலிங்கம், அதிபர், யாழ். மத்திய கல்லூரி, (யாழ். பிரதேச ஆசிரியகலாசாலைகளின் மாணவர்கள்).

மு. ப. 11-00—11-45 நூலறிமுகம்: நூல்- 'நாவலர் பணிகள்', இயற்றியவர்- திரு. ச. தனஞ்சயராசசிங்கம், 1. அறிமுகவுரை: பேராசிரியர் பே. கனகசபாபதி, 2. ஆய்வுரை: மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர், 3. நூலாசிரியர் நன்றியுரை.

பகல் 11-45—1-00 கவி

பி ப 4-30 - 5-30 நாதஸ்வரஇசை திரு எஸ் பஞ்சாபிகேசன் கோஷ்டியினர், மாலை 5-30 - 600 பக்திப் பாடல்: வேம்படி மகளிர்கல்லூரி.

மாலை 6-00 - 7-00 பண்ணிசை திரு வி கே நடராசா கோஷ்டியினர்.

இரவு 7-00 - 9-00கல்லூரி மாணவிகள் நடனங்கள். 1 கொக்குவில் கலாபவனம். 2 பாரதி கலாமன்றம், 3 இராமநாதன் கல்லூரி, 4 வேம்படி மகளிர் கல்லூரி.

இரவு 9-00 - 10-00 பக்திப்பாடல்: திரு பி ஏ இராஜசேகரம்.

இரவு 10 00 - 11-00 நாதஸ்வரம்: திரு பி எஸ் ஆறுமுகம் 9காஷ்டி.

இரவு 11-00 - 12-30 நாதஸ்வரம்: திரு என் கே பத்மநாதன் கோஷ்டி. திரு ஏ பாலகிருஷ்ணன்,

நன்றியுரை: திரு பொ தேவதாசன்.

## திருமலைச் செய்திகள்

நமது திருமலை நிருபர் —

### சிரமதானம்

சாம்பல்தீவு கிராம முன்னேற்றச் சங்கம் ஆத்திமோட்டை முருகன் கோயிலுக்குச் செல்லும் பாதையையும் கோவிலின் சுற்றுடலையும் சிரமதான முறையில் துப்புரவு செய்தது. இச் சிரமதான வேலையில் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் பங்குபற்றினுர்கள்.

பெரியகுளத்திலுள்ள ஒரு

சிதம்பராக்கல்லூரி

## விளையாட்டுபோட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஜி. வி. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் இரங்கநாதன் இல்லம் நூற்றி எண்பத்தி ஐந்தரை புள்ளிகளைப்பெற்று முதலாவது இடத்தையும், குமரகுரு இல்லம் நூற்றியிருபத்தைந்து புள்ளிகளையும், சிதம்பரப்பிள்ளை இல்லம் 119, சின்னத்தம்பி இல்லம் 93 புள்ளிகளையும் பெற்று முறையே இரண்டாம், மூன்ரும், நான்காம் இடத்தைப் பெற்றன.

போட்டிகளின் விபரம் வருமாறு:-

அதிமேற்பிரிவு ஆண்கள்: குண்டெறிதல்- எஸ். தங்கவடிவேல், எஸ். செல்வச்சந்திரன், எஸ் ஸ்ரீஸ்கந்தராசா. தடைஓட்டம்- எஸ். சிவதாஸ், ஜி. ஜெயபாலன், எம். கோகுலு.

மேற்பிரிவு பெண்கள்: நீளம்பாய்தல்- ஏ. பாலகுமாரி, வி. பரமேஸ்வரி, ஏ மகேந்திரம்மா. தடை ஓட்டம்- வி.இரதி, ஜி. மனேரஞ்சிதர், எஸ். பவானி. குண்டெறிதல்- ஆர். மங்களேஸ்வரி, ஆர். ராதா, ஏ. சீதாதேவி.

பழைய மாணவர் ஒருமைல் ஓட்டம்: ரி. சோதிரத்தினராசா.

சாம்பியன் பெண்கள்: கீழ்ப்பிரிவு- எஸ் பிரேமாவதி. மத்திய பிரிவு- ரி. சரோஜினி, மேற்பிரிவு: ஏ, மகேந்திரம்மா, பி. பரமேஸ்வரி, எஸ். இராஜேஸ்வரி.

சாம்பியன்ஆண்கள்: கீழ்ப்பிரிவு- எஸ். வில்வராசா. மத்திய பிரிவு- எஸ். இராமச்சந்திரன். மேற்பிரிவு- சான்சேந்திரகுமர்ர் அதிமேற்பிரிவு: எஸ். தங்கவடிவேல்.

வெற்றி வீரர்களுக்கு திருமதி இரத்தினம் பரிசில்களை வழங்கினுர்.

## 'எம்மிடையேஉள்ளபூசல்களினுல்தான் பிறர் எம்மை மதிக்கிருர்களில்லை'

### வள்ளுவர் விழாவில் கிளிநொச்சி எம் பி.

அல்லைப்பிட்டி,புதன்

''திருக்குறள் தமிழ் மக்களுக்கு மட்டும் சொந்தமான நீதிநூலல்ல, உலக மக்கள் யாவருக்குமே உரிய நூலாக அது விளங்குகின்றது. சகல துறைகளிலும் பின்னடைந்துகிடந்த தமிழனை மேல் நிலைக்கு உயர்த்திய நூல் திருக்குறளே. தமிழனது பெருமையை உலகினுக்குஅறிமுகம்செய்த பெருமை வள்ளுவனுக்கே உரியது'' என பளை மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நாவலர் அரங்கில் நடைபெற்ற திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுவிழாவில் கலந்துரையாற்றிய கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ இரத்தினம் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ''லெமுரியாக்கண்டம் தொட்டு சிந்துநதிநாகரீகம் வரைப்பட்ட காலத்தில் தமிழினத்தின் தொன்மையை பல அறிஞர்கள் நிரூபித்து விட்டார்கள் கடைச்சங்கம் மருவிய காலத்தில் ஆக்கப்பட்ட வள்ளுவனின் வாக்குகள் தமிழினத்தை மேன்மேலும் உயர்வடையச் செய்துவிட்டது

பிள்ளை,பண்டிதர் கா தம்டையா, பண்டிதர் மு ஞானப்பிரகாசம் ஆகியோரும் உரையாற்றினர்.

## 'இலங்கையின் வளர்ச்சிக்கு மேலைநாடுகளில் பாராட்டு'

### விஞ்ஞான மாநாட்டில் உரை

பருத்தித்துறை, புதன்

'இலங்கையின் விஞ்ஞான வளர்ச்சி தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும்பாராட்டக்கூடிய நிலையில் உள்ளது. உலகின் பல பாகங்களில் இயங்கும் உயிரியல், நீரியல் சாதனைகளுக்கு நம் நாட்டுச் சாதனை சளைத்ததல்ல'.

இவ்வாறுமீன்பிடி இலாகா மேலதிகாரியும், இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கப்பிரதிநிதியுமான கலாநிதி கே. சிவசுப்பிரமணியம் நேற்று முன்தினம் நடைபெற்ற விஞ்ஞான ஆசிரியர் மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வடமாநில விஞ்ஞான வித்தியாதிகாரி திரு. எம். அற்புதநாதன் தலைமையில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் கலாநிதி சிவசுப்பிரமணியம் தொடர்ந்து பேசியதாவது:.

'இவ்வித நீரியல்,உயிரியல் ஆராய்ச்சிகள் யாழ்ப்பாணத்துடன் அடங்கிவிடாது. இங்குள்ள ஆசிரியரும் மாணவரும் நாட்டின் பல்வேறுபகுதிகளுக்கும் சென்று அங்கும் இவைபோன்ற திட்டங்களுக்கு முன்னேடிகளாகத் திகழவேண்டும்'.

செயலாளர் திரு.கே. சிவபாதசுந்தரம்நன்றி கூறினுர்.

'ஈழநாடு'

### வீதிசீர்கேடு

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை சாட்டிமாதா தேவாலயத்துக்குச்செல்லும் வீதி பலவருடங்களாகதிருத்தப்படாமலுள்ளது. இதனுல் அவ்வீதியால் செல்லும் பொதுமக்களும் வாகனங்களும் தேவாலயத்துக்குவரும் பக்தர்களும் மிகவும் துன்பமடைகிருர்கள்.

### மீலாத்விழா கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

மஸ்ற உத்தீன் மீலாத் விழா கழகக்கூட்டம் கடந்த 23 ம் திகதி யாழ் மஸ்ற உத்தீன் முஸ்லிம் பாடசாலையில் ஆலிஜனுப் ஆலிஹாஜ் எம். ஏ எம் ஜுனைத் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் கடந்த மீலாத் விழாவை சிறப்பாகக் கொண்டாடியதற்கு நன்றி தெரிவித்தார். (மு.நி

### மாதாந்தக்கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு.ஏ.ஜி. ராஜசூரியர் 25 கேள்விகளைக்கேட்க முன் அறிவித்தல் கொடுத்திருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலலியம் கோபலவாவிட யிடமிருந்து மகாராணியின் சாரணர் பட்டிகளைப் பெற்றனர். இவர்களை இக்கல்லூரியில முதலாவது மகாராணியின் சாரணர் குழுப் பட்டத்தைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


மிருந்து மகாராணியின் சாரணர் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

ஏ. ஆதித்தன், எஸ். இராசலிங்கம் ஆகிய இரு சாரண வீரர்களும் சென்றவருடம்


**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
* சிவாஜி
* பத்மினி
நடித்த
# திருமால் பெருமை

**ராணி** (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
# உயிரா மானமா

இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டுநகர்) — ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
மைலன் (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா



முத்துராமன்
கிதாஞ்சலி
நடித்த
# நெஞ்சிருக்கும் வரை

கிங்ஸ்லி (கொழும்பு)
★ எம். ஜி. ஆர்.
★ சாவித்திரி
நடித்த
தேவரின்
# வேட்டைக்காரன்


டாவது இன்னிங்ஸில் மொத்தம் 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி. தெய்வேந்திரா, எம். சுரேந்திரா, தெய்வேந்திரா ஆகியோர் முறையே 19, 17, 15 ஓட்டங்களைப் பெற்றனர். 'யங்லயன்ஸ்' கோஷ்டியின் அதிவேகப் பந்துவீச்சு வீரர் சண்முகராசா மிகவும் திறமையாகப் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். மற்றும் இம்மனுவல், லூயிஸ் முறையே 2, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

'யங்லயன்ஸ்' கோஷ்டியினர் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பிக்கும்போது இப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு 88 ஓட்டங்களை 70 நிமிடங்களில் பெற வேண்டிய ஓர் இக்கட்டான நிலையில் இருந்தார்கள்.

ஆட்டம் முடிவடையும் போது 'யங்லயன்ஸ்' கோஷ்


வல்வெட்டித்துறை
**ரஞ்சனு தியேட்டர்**
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
**ஒளிவிளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45.
தேவகுமார் - மாலசிங்க
நடித்த
**மேரேலால்**
(ஹிந்தி)
(கொழும்பில் 200 நாட்களுக்கு மேல் ஓடியபடம்.

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த
**நான்**
(ஈஸ்ட்மென் கலர்)

**MANOHARA**
Jaffna
Daily 4 Shows
GUNTHER. UNGEHEUER
in
FOUR KEYS
Terrifying- Explosive-
Shocking
(THE BEST BANK ROBBERY FILM FOR 1968)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Kerwior Mathews
Viviane Ventura
in
**Battle Beneath The Earth**


சிரியர் பே. கனகசபாபதி, 2. ஆய்வுரை: மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர், 3. நூலாசிரியர் நன்றியுரை.

பகல் 11-45—1-00 கவிதையரங்கம், தலைவர்: வித்துவான் கா. கி. நடராசன், பங்குபற்றும் கவிஞர்கள் 'அம்பி' காசி ஆனந்தன், 'மஹாகவி', நீலாவணன், இ. நாகராஜன், காரை. செ. சுந்தரம் பிள்ளை, பா. சத்தியசீலன், வ. கந்தவனம்.

**பி. ப. நிகழ்ச்சிகள்.**

தலைவர்: திரு. மு. சிவசிதம்பரம், பா. உ. உடுப்பிட்டி. ஜனப்பிரதிநிதிகள் சபை உபசபாநாயகர்.

பி. ப. 2-30 3-30 நாதஸ்வரம் திரு. எஸ். சிதம்பரநாதன் கோஷ்டி.

பி. ப. 3-30—5-00 கருத்தரங்கம்: தலைவர்- திரு. சி. லஷ்மணன், (1) நாவலரின் சமயப்பணி: செல்வி புஷ்பா செல்வநாயகம், (2) நாவலரின் தமிழ்ப்பணி: வித்துவான் வி. சி. கந்தையா, (3( நாவலரின் சமுதாயப்பணி: ஜனுப் எஸ் எம். கமால்தீன், (4) நாவலரின் இலக்கியப்பணி: இரசிகமணி கனக. செந்திநாதன், (5) நாவலரின் கல்விப்பணி: செல்வி சற்சொரூபவதிநாதன்.

பி ப 5-00 - 6-00 வில்லுப்பாட்டு: 'நாவலர் பெருமான் கதை' (மட்டக்களப்பு வி. சி. இராசதுரையும், நுணுகலை த. ம. வித்தியாலய மாணவர்களும்) தயாரிப்பு லுணுகலை கணேசதாசன்.

மாலை 6-00 - 8-0 0 சொற்பொழிவுகள்; 1 மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர், 3 திரு. ச. சிவகுமார், 3 செஞ்சொற் கொண்டல் வித்துவான் சா. சிங்காரவேலன்.

இரவு 8.00 - 10-00 பாட்டு: இசைப்பேரரசி சேலம் ஜயலக்ஷ்மி குழுவினர்.

இரவு 10-00 - 11-00 நாட்டிய நாடகம்- 'சித்தம் அழகியார்' இயற்றியவர் திரு. கி, வி இராசசுந்தரம். தயாரிப்பு: செல்வி திரிபுரசுந்தரி-குமாரசுவாமி.

இரவு 11-00 - 12-00 வில்லுப்பாட்டு: திருப்பூங்குடி வி கே. ஆறுமுகம்.

நன்றியுரை: திரு. பொ. அட்சரமூர்த்தி.

**நான்காம் நாள்**

நாலாம் நாள் (2-7-69) தொடக்கிவைப்பவர் திரு. ப ம்தில்லைராசா.

காலை நிகழ்ச்சிகள் இல்லை.

மாலை நிகழ்ச்சிகள்: தலைவர் திரு. க தனபாலசிங்கம்.

வரவேற்புரை: திரு. ஆ தேவராசன்.

லையும் சிரமதான முறையில் துப்புரவு செய்தது. இச் சிரமதான வேலையில் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் பங்குபற்றினர்கள்.

பெரியகுளத்திலுள்ள ஒரு பாதையும் சிரமதானமூலம் திருத்தப்பட்டது. பெரியகுளம் விவசாய அபிவிருத்திக்கழகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்கள் கலந்துகொண்டு இம்மாதம் 22-ந் திகதி சிரமதானமூலம் இப்பாதையைத் திருத்தினர்.

## ஜெர்மனியிலிருந்து நீச்சல் பயிற்சியாளர்

மேற்கு ஜெர்மனியிலிருந்து திரு. ஸி. பிராங் என்னும் நீச்சல் பயிற்சியாளர் திருக்கோணமலைக்கு வரவிருக்கிறார். இவர் அடுத்த மாதம் 26-ந் திகதி ஆகஸ்ட் 1-ந் திகதியும் இங்கு நீச்சல் பயிற்சியளித்து அதற்கான வகுப்புகளையும்நடத்துவார். இதற்கான ஒழுங்குகளையும் திருக்கோணமலை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவஞானமும் கிழக்குப் பகுதி விளையாட்டு அதிகாரி எம். கிருபாகரனும் மேற்கொண்டுள்ளனர்.

## அன்பே அர்ப்பணம்

பரந்த உலகையும் ஜீவராசிகளையும் படைத்து அவைகள் உயிர்வாழ எத்தனையோவித வசதிகளையும் கைம்மாறு கருதாது தேடிவைத்தஎல்லாம்வல்ல இறைவனுக்கு நாம் தினமும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். காட்டை வெட்டிக் கழனியாக்க மனிதனல் முடியும். ஆனல் அந்தக் கழனியில் பயிர்வளர்க்க மழை பெய்விக்க நம்மால் முடியுமா? அதுபோலவே காற்று, நெருப்பு போன்ற எத்தனையோ வழி வசதிகளைத்தேடி ஒரு உபகாரமுஞ் செய்யமுடியாது. இறைவன் நமக்குச் செய்துள்ள எண்ணிலடங்காப் பேருதவிக்கு ஈடாக நிர்மலமான அன்பையும் பக்தியையுமே நாம் இறைவனுக்கு அர்ப்பணிக்க முடியும்.''

தம்பலகமம் மேற்குக் குடியேற்ற முகைதீன் பள்ளிவாசலில் நடைபெற்ற மீலாத் விழாவுக்குத்தலைமை தாங்கி உரைநிகழ்த்திய ஆசிரியர் ஜனுப் எஸ். ஏகபூர். மௌலவி மேற்கண்டவாறு கூறினர்.

ஜனுப் முகமது ஹனிபா இறைவணக்கம்செய்துவிழாவைத் தொடக்கிவைத்தார் ஜனுகள் எஸ் எம் ஜமால்தீன், ஏ. எச். எம். அப்துல் சபார் மௌலவி, எஸ். எம். எஸ் ஜெயின் மௌலானு ஆகியோரும் உரையாற்றினர்கள்.

நிரூபித்து விட்டார்கள் கடைச்சங்கம் மருவிய காலத்தில் ஆக்கபட்ட வள்ளுவனின் வாகுகள் தமிழினத்தை பேன்மேலும் உயர்வடையச் செய்துவிட்டது இன்று உலகடங்கிலுமுள்ள தமிழ்மக்கள் திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு விழாவைக் கொண்டாடிப் பெருமை அடைகின்றனர் இவ்வேளையில் தமிழினத்தைப் பீடித்திருக்கும் துன்பங்களை போக்க நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். நமக்குள்ளே தோன்றும் பூசல்களினல்தான் எம்மை மற்றவர்கள்குறைவாக நினைக்க முடிகிறது.''

இவ்விழாவிற்கு பச்சிலைப் பள்ளிப்பிரிவுக்காரியாதிகாரி திரு சோ. அருணசலம் தலைமை தாங்கினர். யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எப். சி. பிரான்சிஸ் பீற்றர்ஸ், உதவி அரசாங்க அதிபர்: திரு. ரி. முருகேசம்

## கரிக்கட்டுமூலை கி. ச. தேர்தல் முடிவுகள்

முல்லைத்தீவு, புதன்

கரிக்கட்டுமூலை மேற்கு கிராமசபை தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றது. போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம் திரு ஏ. தலைவர்) 2-ம் வட்டாரம் திரு இ. நமசிவாயம், 3-ம் வட்டாரம் திரு யே. சிங்கராசா (போட்டியில்லை), 4-ம் வட்டாரம் திரு ஏ. யோசேப், 5-ம் வட்டாரம் திரு ந. குமாரசாமி (போட்டியில்லை), 6-ம் வட்டாரம் திரு வே. கதிரித்தம்பி, 7-ம் வட்டாரம்: திரு என். தாமோதரம்பிள்ளை, 8-ம் வட்டாரம்: திரு க. விஞசித்தம்பி (போட்டியில்லை)

கரிக்கட்டுமூலை தெற்குக் கிராமசபையின் தேர்தல் முடிவுற்றது. 5 வட்டாரங்களை கொண்டு ஸ்தபிக்கப்பட்ட இக் கிராமசபையின் முதலாம் வட்டாரத்துக்கு இளைப்பாறிய கிராம விதானையார் திரு. சு. மயில்வாகனம் மற்றவர்களிலும் பார்க்க அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### முடிவுகள்

1-ம் வட்டாரம்: திரு. சு. மயில்வாகனம், 2-ம் வட்டாரம்: திரு. கே. மயில்வாகனம், 3-ம் வட்டாரம்: திரு. சி. சின்னத்துரை போட்டியில்லை), 4-ம் வட்டாரம்: திரு. சு. சிவபாதசுந்தரம், 5-ம் வட்டாரம்: திரு. இ சிதம்பரப்பிள்ளை.

யில் குறிப்பிட்டார். பாதசுந்தரம்நன்றி கூறினார்.

'ஈழநாடு'

## புளுகுப்போட்டி--(9)

சென்ற புளுகுப் போட்டியில் பல நேயர்கள் 'ஒரிஜினல்' புளுகுகள் பலவற்றைத் தீட்டிவிட்டார்கள். கற்பனைக்குதிரையிலேறி புளுகு உலகத்தில் புகுந்து பிரமாதமாக புளுகித்தள்ளினர்கள்.

**பரிசுபெறும் புளுகு**

'ஒரு சமயம் காட்டுப்பாதையினூடாக ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோது ஒரு மதயானை என்னை வேகமாகத் துரத்தியது. நல்ல வேளையாக ஒருசந்தி எதிர்ப்பட்டது. உடனே ஜீப்பின் கைகாட்டியை ஒரு பக்கம் காட்டிவிட்டு மறுபக்கமாக வெட்டிக் கொண்டு வேகமாக செலுத்தினேன் யானை கை காட்டி போட்டபக்கம் திரும்பி ஓடிவிட்டது'.

**இதை எழுதியவர்:** மு. தெய்வேந்திரா, 'அன்னவாசம்', கொக்குவில்.

**பாராட்டுக்குரியவை**

பின்வரும் நேயர்களும் திறமான புளுகுகளை தயாரித்து அனுப்பியிருந்தார்கள்: வ பாலசுப்பிரமணியம், மாநகரசபை, யாழ்ப்பாணம். ஆர். பாலன், பிரதானவீதி, சாவகச்சேரி. சி. அருணசலம், இடைக்குறிச்சி, வரணி. க. சி. இராசரத்தினம், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய். வீ பாலசிங்கம், கச்சாய் றோட், கொடிகாமம்.

**அடுத்தபோட்டி**

எங்கே பார்க்கலாம், எமது 9-வது புளுகுப்போட்டிக்கு உங்கள் கற்பனைத் திறனைத் தீட்டிவைத்துக் கொண்டு ஐம்பது சொற்களுக்கு மேற்படாத ஒரு புளுகைப்புனையுங்கள்.

### நிபந்தனைகள்

ஒருவர் எத்தனை புளுகுகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம் ஆனல் ஒவ்வொரு புளுகுடனும் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்பட வேண்டும் அனுப்பவேண்டிய விலாசம்: புளுகுப்போட்டி (9) 'ஈழநாடு' த. பெ இலக்கம், 49, யாழ்ப்பாணம்

விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ள வேண்டாம். ஈழநாடு ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது மிகச் சிறந்ததெனக் கருதப்படும் புளுகுக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-)பரிசுப் பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 30-6-69 வெற்றிபெறும் புளுகும் அதைப் புனைந்தவரின் பெயரும் 3-7-69 இல் வெளியாகும்.

'ஈழநாடு'
புளுகுப்போட்டி (9)

பெயர் ..............................
விலாசம் ..............................
..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷியாவுடனை ராஜீய தொடர்புகளை பிரிட்டன் முற்றாக துண்டித்துக் கொண்டது

## தூதரகப் பிரதிநிதிகள் திரும்புகின்றனர்

## கவர்னர் பதவி துறக்கிறார்

லண்டன், ஜன் 25

சட்டவிரோத ரொடீஷிய அரசுடன் இருந்த கடைசித் தொடர்புகளையும் பிரிட்டன் நேற்றுடன் துண்டித்துக் கொண்டது.

ரொடீஷியாவின் கறுப்பர் அல்லாத சிறுபான்மைவெள்ளையர் வாக்காளர் கடந்த 20ம் திகதி அயன்ஸ்மித்தின் புதியஅரசியல் திட்டத்தை ஆதரித்து வாக்களித்ததைத் தொடர்ந்து பிரிட்டன் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது

ரொடீஷியாவுடனை சகல ராஜீயத் தொடர்புகளும் துண்டிக்கப்படுவதாக நேற்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. ஸ்டுவார்ட் காமன்ஸ் சபையில் அறிவித்தார்.

ரொடீஷியாவிலுள்ள பிரிட்டிஷ் ராஜீயப் பிரதிநிதிகள் திருப்பியழைக்கப்பட்டுள்ளனர் பிரிட்டனிலுள்ள ரொடீஷிய தூதரகமும் மூடப்பட்டிருக்கின்றது.

### கவர்னர் ராஜினமா

ரொடீஷியாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்னர் திரு. ஹம்ப்ரி கிப்ஸ் தமது பதவியை ராஜினமாசெய்துள்ளார்.

சிறுபான்மை வெள்ளையர்கள் பிரிட்டனுடனை தொடர்புகளைத்துண்டித்துக் கொள்வதென்ற அயன்ஸ்மித்தின் கொள்கைகளுக்கும் பெரும்பான்மை கறுப்புமக்களின் உரிமைகளைமறுக்கும் அவரது அரசியல் திட்டத்துக்கும் ஆதரவாக வாக்களித்ததைத் தொடர்ந்து திரு. கிப்ஸ் தமது பதவியை துறந்துள்ளார்.

''ரொடீஷியாவில் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சியை பிரிட்டன் அங்கீகரிக்கவில்லை. அவர்களின் நடவடிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்வதாய் இல்லை பிரிட்டிஷ் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுது'' இவ்வாறு பிரிட்டிஷ் வெளிஉறவு மந்திரி காமன்ஸ் சபையில் அறிவித்துள்ளார்.

### கல்வி அமைய வேண்டிய விதம்

பருத்தித்துறை, புதன்

''கல்வியென்பது உள்ளத்தை மட்டுமன்றி உடலையும், பண்பையும், ஊக்கத்தையும் வளர்ப்பதாக அமையவேண்டும். சிறந்த உடல் வளமே, உளவளத்துக்கு வழிவகுக்கும். எனவே கல்லூரிகளில் உடற்பயிற்சிக்கென ஒரு பிரத்தியேக மைதானமும், உடற்பயிற்சிக்கான கருவிகளும் ஒதுக்கப்படவேண்டியது அவசியம். எதற்கும் அரசாங்கத்தை எதிர்நோக்காது பெற்றூர், ஆசிரியர், பொதுமக்கள் பணந்திரட்டி இப்பணியில் ஈடுபடல் அவசியம்.''

இவ்வாறு நேற்று முன்தினம் நடந்த வதிரி திரு இருதய4 கல்லூரித்திருநாள் விழாவுக்குத் தலைமைதாங்கிய அதிபர் திரு. தோமஸ் ஈப்பொன் கூறினுர்.

விழாவைத் தொடர்ந்து அர்ச். அந்தோனியார் கோவிலில் வண. சிங்கராயர் சுவாமிகளால் திவ்ய பூசைப் பலியும், பாடசாலை ஆசீர்வதிப்பு வைபவமும் நடைபெற்றன. தொடர்ந்து மாணவரின் நாடகங்கள், விநோத உடைப்போட்டிகள் ஆகியனவும் இடம்பெற்றன.

## தந்தையின் மரணத்தில் மக்கள் சந்தேகம்

### சடலத்தை புதைகுழியிலிருந்து எடுக்குமாறு உத்தரவு

காலி, புதன்

ஜூன் மாதம் 3-ம் தேதி புதைக்கப்பட்ட ஜி. சுமதிபாலா என்பவரது உடல் திரும்பவும் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்டு கொழும்பு வைத்திய அதிகாரியினுல் மரணவிசாரணை நடத்தப்படவிருக்கிறது. இவரின் மரணத்தில் இவரது புதல்விகள் இருவர் சந்தேகிப்பதாலேயே காலி நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இம்மாத முற்பகுதியில் சுமதிபாலா என்பவர் காணுமற் போனுர் பின்னர் கொல்லப்பட்டு ஆற்றில் எறியப்பட்டதாக பொலிசாருக்கு அனுமதேயக்கடிதங்கள் கிடைத்ததாம். பொலிசார் ஜூன் 2-ம் தேதி ஜின்கங்கையில இவரின் உடலைக் கண்டுபிடித்துக் கரைசேர்த்திருந்தனர். மரணவிசாரணை நடாத்திய டாக்டர் கீர்த்தி டி. சிலவா நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து சடலம் புதைக்கப்பட்டது. அப்போது உடலுக்கு எவரும் உரிமைகொண்டாடவில்லையாம்.

இறந்தவருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் ஏற்பட்டதகராறு காரணமாக மே 28-ம் தேதி வீட்டைவிட்டுச்சென்ற சுமதிபாலாவின் மனைவி ஜூன் 1-ம்தேதி திரும்பிவந்தபோது தனது கணவனைக் காணவில்லை என்பதைஉணர்ந்தாராம். சுமதிபாலாவின் புதல்விகள் இருவரும் தந்தையின் மரணத்தில் சதி நிகழ்ந்துள்ளதாக சந்தேகிப்பதன் பேரில் சடலம் தோண்டி எடுக்க படவிருக்கிறது. இதற்கான உத்தரவை காலி நீதிபதி இட்டுள்ளார்.

— —

### தமிழரசுக்கிளைக் கூட்டம்

அல்லைப்பிட்டி, புதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புங்குடுதீவு கிளைக் கூட்டம் புங்குடுதீவு இளைஞர் கழக மண்டபத்தில் திரு வே. க. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி எம்.பி. கா. பொ. இரத்தினம் கலந்து கொண்டார்.

பின்வருவோர் புங்குடுதீவு த-அ. கட்சிகிளை உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. வே. க. சோமசுந்தரம், செயலாளர்: திரு. க. திருநாவுக்கரசு, பொருளாளர்- திரு. சி. நாகராசா. வட்டாரத்திற்கு மூவர்வீதம் செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## தமிழ் பகுதி கூட்டுறவு பரிசோதகர்கள் கவலை

உடுப்பிட்டி, புதன்

இலங்கைக் கூட்டுறவு ஆய்வாளர் கழகம் என்ற பெயர் மேற்படி ஆய்வாளர் கழக மூன்ருவது வருடாந்த மகாநாட்டில் ''இலங்கைக் கூட்டுறவுப் பரிசோதகர் கழகம்'' எனமாற்றப்பட்டுள்ளது

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வேறு சில தீர்மானங்கள் வருமாறு:-

புதிய விவசாயத் திட்டத்தின் கீழ் 1967-68 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட விவசாயக் கடனை அறவிடுவதில் குறித்த இலக்கைஅடையத் திறமைகாட்டிய பரிசோதகர்களுக்கு நற்சான்றுப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இந் நற்சான்றுப் பத்திரங்கள் பொலனறுவை போன்ற பகுதிகளில் வழங்கப்பட்டிருந்தும் தமிழ் பகுதிகளில் வழங்கப்படாதது வேதனைக்குரியது காலம் தாழ்த்தாது சான்றுப்பத்திரங்களை வழங்க வேண்டும்.

கூட்டுறவுப் பரிசோதகர்களாக நியமனம் பெறமுன் கூட்டுறவு நிறுவனங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் அரசாங்க அனுமதிபெற்ற எண்பார்வை நிறுவனங்களில் சேவைசெய்திருப்பின் அச்சேவைக் காலத்தை ஓய்வுகால நிதிஉதவி திட்டத்திற்கு அமைச்சர் ஆவன செய்யவேண்டும்.

## வாய்தர்க்கம் பின்னர் தற்கொலையில் முடிந்ததாம்

புலோலி, புதன்

அல்வாய் வடக்கில் வசிக்கும் வடிவேலு செல்லத்துரை பெண் சீதாங்கனி அம்மா (வயது 26) நச்சுத்திராவகம் அருந்தியதால் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உயிர் துறந்தார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். இராமநாதன் விசாரணை நடத்தினர். மரணவிசாரணையில் இறந்த பெண் சீதாங்கனி அம்மாவையும் இவரின் சகோதரியான தங்கரட்ணம் (வயது 39) என்பவரையும் இறந்தவரின் கணவர் வடிவேலு செல்லத்துரை தன் மனைவிகளாக வைத்திருந்ததாகவும் பல காலமாக இரு மனைவிமாருக்கும் எதுவித மனஸ்தாபமும் ஏற்படாமல் பார்த்து வந்ததாகவும் சனிக்கிழமை தங்கரட்ணம் என்பவரும் கணவன் செல்லத்துரையும் கிணற்றில் குளித்துக்கொண்டிருக்கையில் பக்கத்தில் இறந்தவர் நின்ருரென்றும் கிணற்று நீர் வெளியில் போகாது வாழைமரத்துக்கு இறைக்கும்படி கணவர் கூறினுரென்றும் அதனுல் ஏற்பட்ட வாய் வாக்குவாதத்தால் மனக்கசப்பு ஏற்பட்டு பின் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

மந்திகை ஆஸ்பத்திரி அதிகாரி டாக்டர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி சாட்சியமளிக்கையில், இறந்தவர் நச்சுத்திராவகம் அருந்தியதால் இறக்க நேரிட்டது என்று கூறினுர்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## ரொடீஷியாமீது படைபலப்பிரயோகம்:

# ஆஸிய ஆபிரிக்க தீர்மானம் பாதுகாப்பு சபையில் தோல்வி

நியுயோர்க், ஜூன் 25

ரொடீஷியா மீது படைபலத்தைப் பிரயோகிக்கும்படி பிரிட்டனை வற்புறுத்தியும், தென்னுபிரிக்காவுக்கும் போர்த்துக்கல் மொஸாம்பிக்கிற்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விஸ்தரிக்கும்படியும் கோரி ஐ. நா. பாதுகாப்புச்சபையில் ஆசிய ஆபிரிக்க நாடுகள் கொண்டுவந்த தீர்மானம், தோல்வியடைந்தது. தீர்மானம் செயல்படுத்துவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பகுதி பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை.

ஐந்து ஆசிய ஆபிரிக்க நாடுகள் இந்தத் தீர்மானத்தைத் தாக்கல் செய்திருந்தன.

தீர்மானத்தை ஆதரித்து சோவியத்யூனியன் உட்பட எட்டு நாடுகள் வாக்களித்தன. பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் ஏழு நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

தீர்மானத்துக்கு தேவையான பெரும்பான்மை கிடைத்திருந்தாலும் பிரிட்டன் தனது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து தீர்மானத்தை முறியடித்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

## 12 வீடுகள் திருமலையில் தீக்கிரையாகின

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலையில் சீனன்வாடி எனும் இடத்தில் ஜெகநாதன் ஜெற்றிக்கு அருகாமையிலுள்ள 12 ஓலை வீடுகள் தீக்கிரையாகிச் சாம்பராகின.

சீனன்வாடிப் புகையிரத நிலையத்திலிருந்து தேயிலை நிர்வாக ஸ்தாபனத்திற்குத் தேயிலைப் பெட்டிகளைஇழுத்துச் சென்ற புகையிரத(கரி) எஞ்சினிலிருந்து பறந்த தீப்பொறிகளே இந்த வீட்டுக் ... ந்து கிளம்பிய தீப்பொறிகள் இந்த வீடுகளின் கூரைகளிற் பறந்து நெருப்பைப் பற்றவைத்ததாம்.

தீயினுல எந்தவிதமான உயிராபத்துக்களும் ஏற்படாதிருந்தும் கூடப் பற்றி எரிந்த வீடுகளிலிருந்துசிறிய பொருளேனும் மீட்கமுடியாத நிலையில் கருகிச் சாம்பராகிச் சேதமடைந்துள்ளன.

பெருந் தீயை அணைப்பதற்கு விமானப்படைச் ...

# தெலுங்கானா கிளர்ச்சி தலைவர்கள்பலர், கைது

## டில்லி பேச்சுவார்த்தைகள் முறிவு

புதுடில்லி, ஜூன் 25

தெலுங்கானு தலைவர்கள் டாக்டர் சென்னுரெட்டி, திரு. கோண்டா ...

கேரளத்தில்

# நம்பூதிரிபாட் அரசு கவிழும் அபாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிழும் அபாயம் அவரே கூறுகிறர்

திருவனந்தபுரம், ஜூன், 24

கேரள ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்துவிடக்கூடிய அபாயகரமான நிலைமையில் இருக்கிறது என்று முதலமைச்சர் ஸ்ரீ நம்பூதிரிபாட் கூறினர்.

ஐக்கிய முன்னணி நீடிக்குமா என்பது பற்றி நிச்சயமற்ற நிலைமையாயிருப்பதால், அசெம்பிளியை இப்போது கூட்டப் போவதில்லை என்றும் அவர் சொன்னர்.

கூட்டணிக்குள் சண்டை பூசல்களுடன் 28 மாதங்களைத் தள்ளிவிட்ட நம்பூதிரிபாட் மந்திரிசபை அடுத்த 2வாரத்தில் 29வது மாதத்தை எட்டிப்பார்க்கவிருக்கையில், அவரே கவிழ்ந்துவிடும் என்று சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நம்பூதிரிபாட் அழைத்திருந்த நிருபர்கள் கூட்டத்துக்கு என்றுமில்லாத அளவு அதிகம் பேர் வந்திருந்தார்கள். கட்சி சகாக்கள் முன்னிலையில் அனல் கக்குவது போல்அவர் பேசினர். வலது கம்யூனிஸ்ட்டுகளைக் குறிப்பிட்டு, "உங்களுக்கு சுயமரியாதை இருந்தால் வெளியேறிவிடுங்கள்" என்ருர். மற்ற கூட்டாளிக் கட்சிகளைப் பார்த்து, கூட்டணிக்குள்ளேயே அவர்கள் 'செட்' சேர்த்துக் கொள்வதைப்பற்றி கடுமையாக எச்சரித்தார்.

முன்னணியில்உள்ள மற்ற கூட்டாளிக் கட்சிகளுடன் எல்லாபிரச்னைகளையும் குறித்து விவாதிக்க எனது கட்சி தயார். ஆனல், அவர்கள் ஐக்கியமுன்னணியில் நீடித்து இருக்கப் போகிறர்களா என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ளவேண்டும் என்று நம்பூதிரிபாட் ஒரு கேள்விக்கு பதிலளித்தார்,

## மடுமாதா திருநாள்

யாழ்ப்பாணம், வியாழன்

மடுமாதா திருநாள் அடுத்தமாதம் இரண்டாம் திகதி திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் பூர்த்தியாகும்.

தினமும் காலை மாலை வேளைகளில் ஆராதனைகள் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும்நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து மடுத் தேவாலயத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு நேற்றிலிருந்து பஸ்கள் சேவைக்கு விடப்பட்டுள்ளதாக இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விலைக் கட்டுப்பாட்டிலாகாவினர் மடுத்தேவாலயத்திலுள்ள கடைகளில் அதிக கவனம் செலுத்தி பொருட்களை கட்டுப்பாட்டு விலையில் யாத்திரீகர்கள் பெறுவதற்கு உதவுகின்றனர்.

பொலிஸாரும் சுகாதாரப்பகுதியினரும் யாத்திரீகர்களின் நலன்களைக் கவனித்துவருகின்றனர். இரவு 11 மணிக்குப் பின் மடுத் தேவாலயத்திலுள்ள யாத்திரீகர்கள் தேவையற்ற விதமாக நடமாடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

---

## அன்னதான சபையின்பணி

யாழ்ப்பாணம், வியாழன்

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான்ஸ்ரீ மஞேன்மணி அம்பாள் அன்னதான சபையோர் கடந்த காலங்களைப் போல் இந்த வருடமும் நயினதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்குவரும் அடியார்களுக்கு இன்று தொடக்கம் 28-ம் திகதி வரை அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்ற மண்டபம் அமைக்கும் முயற்சியில் இச்சபையினர் இப்போது ஈடுபட்டுள்ளனர். 115 அடி நீளமும் 24 அடி அகலமும் கொண்ட மண்டபம் அமைப்பதில் தமக்கு உதவியளிக்குமாறு இச் சபையினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

# பத்துலட்சம் பேருக்குமேல் கென்னடி முனையில்கூடுவர்

## அப்பலலோ 11 வீரர்கள் புறப்படுவதைப்பார்க்க

கென்னடிமுனை, ஜூன் 24

ஜூலை மாதம் 16-ம் திகதி அமெரிக்காவின் அப்பலோ 11 விண்வெளி வீரர்கள் சந்திரனை நோக்கிப் புறப்படும்பொழுது அதனைப் பார்ப்பதற்கு பத்து லட்சம் மக்களுக்கும் அதிகமானவர்கள் கென்னடி முனையில் கூடுவார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது

சந்திரனுக்கு மூன்று விண்வெளி வீரர்களையும் சுமந்து செல்லும் ராக்கட் செலுத்தப்படுவதைப் பார்ப்பதற்கு அமெரிக்க அதிபர் நிச்ஸனும் கென்னடி முனைக்கு வருகை தருவார். காங்கிரஸ் அங்கத்தவர்களும் நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சந்திரனுக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் ஜூலை 23-ந் திகதி சந்திரத் தரையில் அமெரிக்க கொடியை நாட்டும் காட்சியை பூமியிலுள்ள லட்சக்கணக்கானவர்களும் டெலிவிஷனில் பார்க்கக்கூடியதாகவிருக்கும்.

அமெரிக்க வீரர்கள் கொண்டுசெல்லும் கொடி துணியினுல் அல்லவென்றும் சந்திரனில் காற்று இல்லையென்பதால் கொடி நேராக பறப்பதுபோல் இருக்கும் வகையில் பிளாஸ்டிக் போன்ற பொருளினுல் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அரைச்சலார் ஆக்கும்படி கோரிக்கை

கோட்டை, புதன்

யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெறவிருக்கும் ஆறுமுகநாவலர்சிலைதிறப்புவிழாவுக்குக் கொழும்பிலிருந்து கலந்துகொள்ளச் செல்பவர்களுக்கு புகையிரதக் கட்டணத்தை அரைச்சலாராக்குமாறு புகையிரத ஜெனரல் மனேஜரை நாவலர் சபை கேட்டுள்ளது. நாவலர்சிலை பவனி ஆரம்பமான தினத்தன்று தொடக்கம் விழா முடியும்வரை கட்டணத்தைக்குறைக்கும் சலுகையை வழங்குமாறு நாவலர்சபை தனது வேண்டுகோளில்தெரிவித்துள்ளது.

# டில்லி பேச்சுவார்த்தை முறிவு

புதுடில்லி, ஜூன் 25

**தெலுங்கானு தலைவர்கள் டாக்டர் சென்னுரெட்டி, திரு. கோண்டா லட்சுமண பாபுஜி ஆகியவர்கள் உட்பட தெலுங்கானு சட்டசபை உறுப்பினர்கள் பலரும் வேறு தலைவர்களும் இன்று அதிகாலையில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.**

தெலிங்கானு கிளர்ச்சிக்காரர்கள் பலர் நேற்று கைதானர்கள். ஹைதராபாத்தில் ஹோட்டலொன்றைத் தகர்த்துப் பொலிஸ் நிலையமொன்றை நொருக்கியும் கிளர்ச்சிக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்ட பொழுது பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்தும் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும் கட்டுப்படுத்த முயற்சிசெய்தனர். ஆனுல் நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ராணுவம் அழைக்கப்பட்டது. கடந்த மூன்ரும் திகதியிலிருந்தே ஆந்திராவில் தயார் நிலையிலிருந்து வருகின்றது.

நேற்றுக் கைதுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் ஜெயிலில் இடமின்மையால் தனிக்கட்டடங்களில் அடைக்கப்பட்டனர். அவர்கள் கட்டிட வாயல்களை உடைத்துக்கொண்டு வெளியில் வந்து மீண்டும் வன்முறையிலிறங்கினர்கள்.

இன்று தெலுங்கானுவில் பூரண 'பந்த்' அனுஷ்டிக்கும்படி மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். இதற்கிடையில் முக்கிய தலைவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பது கிளர்ச்சிக்காரர்களுக்கு சற்றுப் பதற்றத்தைக் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது

## மத்திய தலைவர்களுடன் பேச்சு வார்த்தை தோல்வி

நேற்று மத்திய அரசுத் தலைவர்களோடும் காங்கிரஸ் தலைவர்களோடும் தெலுங்கானு தலைவர்கள் டெல்கியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு டாக்டர் சென்னுரெட்டி, கோண்டா லக்சுமண பாபுஜி போன்ற தலைவர்கள் ஹைதராபாத் திரும்பியதும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டனர்.

ஆந்திராவில் ஜனுதிபதி ஆட்சி ஏற்படவேண்டுமென்றும் அதன் பிறகு கிளர்ச்சிகளைச் சில காலம் ஒத்திவைக்கலாமென்றும் இந்தத் தலைவர்கள் மத்திய அரசுத் தலைவர்களிடம் வற்புறுத்தியதாகத் தெரிகின்றது.

பேச்சுவார்த்தைகள் முறிவுற்றதால், புதனன்று துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஹைதராபாத் போவதாக இருந்ததும்ரத்துச்செய்யப்பட்டது.

உடனடியாக ஜனுதிபதி ஆட்சியை ஏற்படுத்தவேண்டுமென்று தெலுங்கானு தலைவர்கள் வற்புறுத்தியதுதான் பேச்சுவார்த்தைகள் முறிவுற்றதற்குக் காரணமென்று கருதப்படுகின்றது.

டாக்டர் சென்னுரெட்டி கோண்டா லக்சுமணமாபுஜி ஜே. சோகாராவ், ராமச்சந்திரரெட்டி முதலியவர் நேற்றுக்காலையில் திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்துப் பேசினர்கள். ஆந்திராவில் உடனடியாக ஜனுதிபதி ஆட்சியைக் கொண்டுவருவது சாத்தியமில்லையென அவர்களிடம் தெளிவாகக் கூறப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தச்சந்திப்பின்போது காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவும் சிறிதுநேரம் உடனிருந்தார்

ஏககாலத்தில் தெலுங்கானு கிளர்ச்சி வாபஸ் பெறப்படுவதானுல் முதல் மந்திரிப் பதவியிலிருந்து விலக திரு. பிரமானந்தரெட்டியை இணங்க வைப்பது பற்றி யோசிக்க மேலிடம் தயாராயிருக்குமென்றும் இதுதான் செய்யக் கூடியதாயிருக்குமென்றும் இந்தச் சந்திப்பின்போது தெலுங்கானு தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

உடனடியாக ஜனுதிபதி ஆட்சியைக் கொண்டுவந்தாலொழிய கிளர்ச்சியை வாபஸ்பெறுவது சிரமமாயிருக்குமென்றும் இந்தக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதால் திரு. தேசாய் ஹைதரபாத் வருவதால் பலன் ஏதும் இராதென்றும் தெலுங்கானு தலைவர்கள் திரு. தேசாயிடம் தெரிவித்ததாகத் தெரிகின்றது.

## கல்வி நூற்ருண்டு விழா

பருத்தித்துறை,புதன்

கல்விநூற்ருண்டுவிழாவையொட்டி உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகள் நடாத்தும் பொருட்காட்சி வருகிற மாதம் 3 ம்,4 ம் திகதிகளில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

முதல் நாள் காட்சியை வட மாநிலக் கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலமும் இரண்டாம் நாள் காட்சியைப் பகுதி எம்.பி யும்,உபசபாநாயகருயான திரு.எம். சிவசிதம்பரமும் திறந்து வைத்து உரை நிகழ்த்துவார்கள்

பொருட்காட்சியை ஒழுங்குபடுத்தும் பணியை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு.எஸ். மகேஸ்வரஐயரும், உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலை அதிபர்கள் சங்கச் செயலாளர் திரு. ஜே. கே. செல்லத்துரையும் மேற்கொண்டுள்ளனர்.

---

## அளவை பற்றி பரிசோதனை

கோட்டை, புதன்

அரசாங்க நெல்களஞ்சியங்களில் ஏற்பட்டுள்ள ஊழல்களை நீக்குவதற்காக விவசாய சேவைகள் ஆணையாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இக்களஞ்சியங்களில் நெல்லு உபயோகிக்கும் புசல் அளவையைப் பரிசோதிக்குமாறு கட்டளையிட்டுள்ளார்.

களஞ்சியப் பொறுப்பாளர்கள் முறையீடுகளைப் பதிவு செய்வதற்கு ஒரு புத்தகம் வைத்திருக்குமாறும் விவசாய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நெல் களஞ்சியங்கள் தங்கள் சேவைகளைத் திருப்திகரமாகச் செய்யவில்லையெனக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்த புகாரைத் தொடர்ந்தே விவசாய ஆணையாளர் இந்த நடவடிக்கையை மேற்கொண்

நிலையத்திலிருந்து தேயிலை நிர்வாக ஸ்தாபனத்திற்குத் தேயிலைப் பெட்டிகளைஇழுத்துச் சென்ற புகையிரத(கரி) எஞ்சினிலிருந்து பறந்த தீப்பொறிகளே இந்த வீட்டுக் கூரைகள் மேல் விழுந்து நெருப்பை உண்டாக்கியிருக்கின்றன எனக் கூறப்படுகிறது. வழமையாக நிலக்கரியையே இந்தப் புகைவண்டிக்குப் பாவிப்பதாக இருந்தபோதிலும் நிலக்கரி தட்டுப்பாட்டின் காரணமாகத் தற்போது மரக்கட்டைகளையே உபயாகிப்பது வழக்கம். இதனுலேயே கொள்ளியிலி

பொருட்களேனும் மீட்கமுடியாத நிலையில் கருகிச் சாம்பராகிச் சேதமடைந்துள்ளன.

பெருந் தீயை அணைப்பதற்கு விமானப்படைச் சேவை கடற்படை சேவை நகரசபை ஆகிய மூன்று இடங்களிலிருந்தும் 5 தீணைக்கும் எஞ்சின்கள் ஒருமித்துப் பல மணி நேரம் போராடின

இத்தீ விபத்து சென்ற 21-ம் கதி நடைபெற்றது

இதன் காரணமாக பல குடும்பங்கள் நிர்க்கதியாக்கப் பட்டுள்ளன.

# விஞ்ஞான வசதி காண்ட கல்லூரி நிறுவ வேண்டும்

## ஜி ஜி. க்கு கைதடி மக்கள் மகஜர்

யாழ்ப்பாணம், வியா.

கைதடி கிராமத்து மக்கள் தமது கிராமத்தின் அவலநிலையையும் தமக்குள்ள குறைபாடுகளையும் கொண்ட மகஜர் ஒன்றை தமிழ்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் சமர்ப்பித்து இவற்றுக்கு ஆவனசெய்யும்படி வற்புறுத்தியுள்ளனர்.

அந்த மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:

கைதடி மிகவும் பரந்த நிலப்பரப்பாகையால் பஸ் சேவைகள் நடக்கும் கைதடிச் சந்தியிலிருந்து ஏனைய பகுதிகள் மிகத் தொலைவில் உள்ளன. கைதடி வடக்கு, கைதடிச் சந்தியிலிருந்து மூன்றுமைல் தொலைவில் உள்ளது. எனவே இத் தொலைவில் வாழும் உத்தியோகத்தர்கள், பாடசாலைப்பிள்ளைகள் வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் போன்றவர்கள் தமது அன்ருட அலுவல்களுக்கு யாழ்ப்பாணம் போகவும் ஏனைய இடங்களுக்குப் போகவும் மூன்று மைல் தூரம் நடக்க வேண்டியுள்ளது. எனவே இக் குறைபாட்டை நீக்கி கைதடி வடக்கு வரை காலையிலும் மாலையிலும் இரண்டு பஸ் சேவையை ஏற்படுத்தவேண்டும்.

ஏறக்குறைய 15,000 சனத்தொகைகொண்ட கிராமத்தில் வாழும் மக்களின் பிள்ளைகள் உயர்தரக் கல்வி பெறுவதற்கான ஒரு சிறந்த பாடசாலை கைதடியில் இல்லை. இங்குள்ள ஆறு பாடசாலைகளிலும் கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பு வரையே உண்டு. இப்பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிக்கப்படுவதுமல்ல.

எனவே இக்குறைபாடுகளை நீக்கி உயர்தர வகுப்புகளை கொண்ட விஞ்ஞான பாடங்களை வசதியுடன் கற்பிக்கத் தக்க சிறந்த ஒரு கல்லூரியை உருவாக்கிதரவேண்டும்.

டுள்ளதாகத் தெரிகிறது. மேலும் களஞ்சியப்பொறுப்பாளர்களே நெல்லைத் தரம் பிரிக்கவும் அதை அளப்பிப்பதற்கும் பொறுப்பாளர்களாகவிருக்கவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

---

## பாராட்டுவிழா

திருகோணமலை,புதன்

சாம்பல்தீவு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தலைமையாசிரியையாகக் கடமையாற்றிய திருமதி இ. காசிநாதர் தனது 36 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு சாம்பல்தீவு மிஷன் பாடசாலைப் பெற்ருேர் ஆசிரிய சங்கம் ஒரு பிரிவுபசாரம் அளித்தது. வைபவத்துக்கு திருக்கோணமலை பிரதம கல்வி அதிகாரி திரு.சந்திரசேகரம் பிள்ளை தலைமை தாங்கினர். ஓய்வுபெறும் ஆசிரியையின் 36 ஆண்டுகால சேவைகளையும் பாராட்டி திரு.எம்.ரி. காசிநாதர் உட்பட பலர் பேசினர்.

---

## ஆங்கிலதினம்

வல்வெட்டித்துறை,புதன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் "ஆங்கில தினம்" ஆங்கில ஆலோசகர் திரு. எஸ். ஜே. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த 6 ஆங்கில பாடசாலைகள் பங்குபற்றின. பரிசில்களும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'அஹிம்சை பற்றி அறிவுரை கூறமுடியாது. அதைப் பின்பற்றத்தான் வேண்டும்'.

— மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆனி மாதம் 12-ந் திகதி (26-6 69)


## இன்று நாவலர் இருந்தால் ...

ஏகாதிபத்தியவாதிகளின் பிடியிலிருந்த தமிழ் கலாசாரத்தையும் இந்துசமயத்தையும் பாதுகாக்க நாவலர் பெருமான் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியதென்றும் கொழும்பிலே நாவலர் சிலை வழியனுப்பு விழாவில் பேசிய பிரதமர் டட்லி சேனநாயகா போற்றி அவருக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்

ஏகாதிபத்திய பிடி இப்போது நீங்கிவிட்டது, உண்மையே. என்றாலும் தமிழ் கலாசாரத்துக்கும் சைவசமயத்துக்கும் ஆபத்து நீங்கிவிட்டதா? இதைப்பற்றி சற்றே யோசித்தால் பழைய வெளி ஆபத்துக்கள் நீங்கினாலும் புதிய உள் ஆபத்துக்கள் வளர்ந்துவருவதை உணரலாம். நாத்திக வாதமும் உலோகாயதமும் சாதி வாதங்களும் மலிந்து புதுப்புதுச் சிக்கல்களை ஏற்படுத்தி அன்பையும் கருணையையும் அடிப்படையாகக் கொண்ட சைவ சமூகத்தை அளித்துவருகின்றன வெனில் அது மிகையாகாது.

இந்த அவலநிலை நீங்க என்ன செய்வதென்று இன்றுள்ள தலைவர்களுக்கும் தெரியாமலும் முடியாமலும் உள்ளது. இந்நிலையில் இந்த உள் ஆபத்துக்களை நீக்க சைவம் ஏதாவது வழிகாட்டுகிறதா? நாவலர் பெருமான் இன்று உயிருடன் இருந்தால் இந்தப் புதிய சிக்கல்கள் நீங்க என்ன செய்வார் என்பன முக்கியமான பயனுள்ள கேள்விகளாகும்.

அன்புவழியிலே சமூகச் சிக்கல்களையும் குறைகளையும் நீக்குவதே சமயத்தின் பயனுள்ள பணிகளாகும். சிறப்பாக பட்டினிப் பிரச்னையைக் கோவிலில் அன்னதானம் செய்வதன்மூலம் தீர்ப்பதாயின் சமூகத்தின் பல சிக்கல்கள் நீங்கக்கூடும். இன்று கோயில்களில் சமூகத்துக்குத் தேவையான பணிகள் நடைபெறுமல் எல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பு என்று விட்டதினால்தான் கோயில்களுக்கு பொதுமக்கள் செல்லுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. பணம்தான் சமூகத்தின் அடிப்படையாகவுள்ளதேயன்றி அன்புக்கு இடமில்லை. மீண்டும் அன்பை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தின் பெயரால் சமுதாயத்தை மாற்றினாலே சமயமும் சமுதாயமும் வளரமுடியும்.

இன்று யாழ்ப்பாணத்திலே பலரையும் கலங்கச் செய்துள்ள சாதிப் பிரச்னையையும் இது காரணமாக சிலர் பௌத்தராக மதம் மாறுவதையும்பற்றி நாவலர் பெருமான் இன்றிருந்தால் கண்ணீர் வடித்து, துணிச்சலுடன் இது தீர ஒரு வழி காட்டியிருப்பார். சாதியை விட சமயமே மேல் என்று தெளிவாக அறிவுறுத்திய அவர், நாயன்மார்களில் கண்ணப்பர், திருநாளைப்போவார் போன்ற குறைந்த வருணத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கோயிலில் பூசை செய்ய பின்வாங்கிய சில குருக்கள் மார்களை 'பதிதர்' என்று வன்மையாகக் கண்டித்துள்ளது குறிப்பிடத்தக்கது. சைவ சமூகத்துக்கு வழிகாட்டியாகவுள்ள பெரிய புராணம்சாதிஉயர்வுதாழ்வுக் கொடுமைக்கு சாவுமணி அடிக்கும் நூலென்று சைவ அறிஞரொருவர் தெரிவிக்கின்றார். அப்பேர்ப்பட்ட தெய்வீக நூலை வழிகாட்டியாகக் கொண்டு அதிலுள்ள நாயன்மார்களின் இலட்சிய வாழ்க்கையைப் பின்பற்றுவதாயின் இன்று சைவ சமூகத்தில் மட்டுமல்ல, உலகப் பிரச்னைகளே அன்புவழியில் தீர வழிபிறக்கும். நாவலருக்கு விழாவெடுப்பதில் பெரும் உற்சாகம் காட்டுபவர்கள் சமூகத்தின் இன்றைய பிரச்னைகளைத் தீர்க்க, நாவலர் காட்டிய வழியில் காரியம் செய்வதே, அவருக்கு உண்மையில்செலுத்தும் அஞ்சலியாகும்.

## ஆசியா "கூட்டுகள்"

# தமிழுலகுக்குப் புதிய உரை நடை தந்த வள்ளல்

— செல்வி குணமணி கதிரவேலு —

ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலத்தை இலக்கிய வரலாற்றாசிரியர் ஐரோப்பியர் காலமென்பர். ஐரோப்பியர் தமது மதத்தையும் மொழியையும் வெகுதீவிரமாகத் தமிழ் மக்களிடையே பரப்பியகாலம். கிறிஸ்தவர்களது முக்கிய நோக்கம் தமதுமதத்தைப்பரப்புவதேயாகும். பிரசங்கங்கள் துண்டுப்பிரசுரங்கள் பத்திரிகைகள் ஆகியவைகளைப் பயன்படுத்தித் தம் மதத்தைப் பரப்பினார்கள். இதனால் தமிழ் மக்கள் பலர் கிறிஸ்தவராயினர். உத்தியோகத்திற்காகப் பலர் ஆங்கிலக் கல்வியைக் கற்றனர். இதன் காரணமாகத் தமிழும் சைவமும் தம்நிலைகுலையத் தொடங்கின.

இத்தகைய ஒரு இக்கட்டான சூழ்நிலையிலேதான் நமது ஆறுமுகநாவலர் தமிழையும் சைவத்தையும் தழைக்க வைக்க உறுதி கொண்டார். பாதிரிமார்களிடமே கல்விகற்று ஆங்கில அறிவும் தமிழறிவும் ஒருங்கே வரப்பெற்ற நாவலர் பெருமான் கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தைப்பரப்ப என்னென்ன முறைகளைக் கையாண்டார்களோ அந்த முறைகளைத் தானும் கையாண்டு சைவத்தையும் தமிழையும் அழியாது காக்கத் தொடங்கினர், பாதிரிமார் கையாண்ட வழிவகைகளை அனுபவாயிலாகக் வ கண்டறிந்த நாவலர் பெருமான் அவர்களையெல்லாம் துணிந்து தனித்து நின்று எதிர்த்தார். சமயப் பிரசாரம் செய்தார் துண்டுப்பிரசுரங்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார். எளியநடையிலே பல சமய நூல்களை எழுதினர். இவற்றுக் கெல்லாம் உறுதுணையாக இருந்த மனத்தைரியபலமும் அறிவாற்றலும் அதனை வெளிப்படுத்துதற்கேற்ற பேச்சுவன்மையும் உரைநடை எழுத்தாற்றலுமாகும்.

தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் கொண்டு அப்பேற்றுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த நாவலர் பெருமானதுஉரைநடை இலக்கிய வரலாற்றிலே தனிச் சிறப்புவாய்ந்ததாகும். பொதுமக்கள் மத்தியில் சமய உணர்ச்சியை உண்டுபண்ண வேண்டுமாதலால அவர்களுக்கு விளங்கத்தக்க எளிய நடையிலே நூல்களை எழுதினர்; சமயப்பிரசங்கங்களைச் செய்தார், நாவலர் பெருமானுக்கு, தனக்கு முன்பு வாழ்ந்த சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள்எழுதியது போன்ற சந்திவிகாரங்களோடு கூடிய உரைநடை எழுத முடியும். சங்ககாலப் புலவர்கள் போன்று வீரமும் காதலும்பற்றி சிறந்த பாக்கள் இயற்ற இயலும். சோழர் காலப் புலவர்கள் போன்று காப்பியங்கள் புனையும் புலமையுண்டு ஆனால் இத்தகைய அறிவாற்றல் இருந்தும் இவைபோன்ற கற்றவர்க்கே உரியஇலக்கியங்கள் செய்யாது தன்னிலையில் இருந்து இறங்கி பாவலர் தொடங்கி பாமரர் வரை, பண்டுகிழவர்கள் தொடங்கி பாலகர் வரை விளங்கிக் கொள்ளத்தக்கவாறு அவர் நூல்களைஎழுதினர் காரணம் பொதுமக்கள் மத்தியில் சைவப்பற்றையும் தமிழ்ப் பற்றையும் ஏற்படுத்த அவர்கள் விளங்கிக்கொள்ளத்தக்க வகையில் எழுத வேண்டும் என்பதனாலாகும்

அவர் கையாண்ட உரைநடை பலவகைப்பட்டதாகும். கண்டனநூல்கள், உரைநடைநூல்கள், கட்டுரைகள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றில் ஒரே மாதிரியான உரைநடையைக் கையாளாமல் அவற்றின் தேவைகளுக்கேற்ப உரைநடையைக் கையாண்டுள்ளார். திருவிளையாடற் புராணம், பெரியபுராணம், கந்தபுராணத்தில் ஒருபகுதி, பாலபாடம், நன்னூற்காண்டிகையுரை, சைவசமய நெறியுரை, சிவதருமோத்திரயுரை, கோயிற்புராணவுரை ஆகியன நாவலர் எழுதிய உரைநடைநூல்களுட் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றில் பெரியபுராணத்தில் உரையாசிரியர்களின் உரைநடைபோன்ற கடின உரைநடையைச் சிலவிடங்களில் காணலாம். கிறிஸ்துமத கண்டனத்திரட்டு, சைவ தூஷணபரிகாரம், சுப்பிரபேதம், வச்சிரதண்டம், கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு முதலியன குறிப்பிடத்தக்க கண்டன நூல்களாகும், இக்கண்டன நூல்களிலும் கட்டுரைகளிலும் பொதுமக்கள் விளங்கத்தக்க சிறியசிறிய வசனங்களால் ஆன எளிய உரைநடையினைக் காணலாம்

தமிழ்உலகுக்கே ஒருபுதிய உரைநடையை ஆரம்பித்த நாவலரின் உரைநடையில் காண்பது 'தெளிவு' ஆகும். பொருளில்லபத வெற்றுச் சொற்களை அவர் வாக்கியங்களில் காணவியலாது. அடுத்து முதல் முதல் குறியீடுகளை சிறந்த முறையில கையாண்ட பெருமையும் இவரைச்சாரும். குறியீடுகளைச் சிறந்த முறையில கையாண்டதனலதான் இவரது உரைநடையும் சிறப்பாகச் சிறுசிறு வசனங்களால் ஆகித்தெளிவுபெற்றதெனலாம் இத்தகைய ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த உரைநடையை நாவலர் பெருமான் ஆரம்பித்து வைத்ததன் காரணமாகவே அவரை உரைநடை கைவந்த வலலாளர் என்பர் அறிஞர்.

## நாவலரின் சிலை காணல்

### ஆசிரியருக்கு கடிதங்கள்

## நாவலர் சிலை பவனியில் கீரிமலை கைவிடப்பட்டதுஏன்?

தமிழ்நாட்டில் சிறப்பாக ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் வாழவைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களுக்குச் சிலையெடுத்துப் பெருவிழா செய்வது கண்டு மகிழாத தமிழர்கள் சைவர்கள் யாருமே இருக்க முடியாது. ஈழத்தில் சைவத்தலங்களில் மூர்த்தி தலம் தீர்த்தத்தில் முதன்மையுடையது கீரிமலையாகும் இக்கீரிமலைச்சிவன் கோயில் போர்த்துக்கேயரால் சீரழிக்கப்பட்டுத் தேடுவாரற்றுக் கிடந்த காலத்தில் இதனைச் சைவ உலகுக்கு உணர்த்தி 'கீரிமலைச் சிவன்கோயில்' எனும் பத்திரிகை ஒன்று வெளியிட்டுப் புனருத்தாரணம் செய்வதற்கு அத்திபாரமும் இட்டவர் ஆறுமுகநாவலரே. இதனால் கீரிமலையுடன் நெருங்கிய நேரடித் தொடர்புடையவர் நாவலர் பெருமான் அவர்கள் என்பதை அறியலாம் என திரு. த. கைலாசபிள்ளை எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாவலர்சிலை ஊர்வலம் வடமாகாணத்தின் பல பகுதிகளுக்கும் இடம்பெறுவது யாவரும் அறிந்ததே. எனினும் நாவலருடன் தொடர்புடைய நாவலரால் தொடக்கப்பட்ட சிவன்கோயிலிலுள்ள புண்ணியதலமான கீரிமலைக்கு நாவலர் சிலை ஊர்வலம் வர... கவலையும் வேதனையுமடைந்துள்ளனர். நாவலர் விழாவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாவலர்சிலை கீரிமலைக்கு வர வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டி வற்புறுத்தியும் பயனளிக்கவில்லை. இதற்குரிய முயற்சிகளை மேற் கொண்ட குழுவில் கீரிமலைச் சிவன் கோயில் ஆதீனகர்த்தர், கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அதிபர், அகில இலங்கைச் சைவப்புலவர்சங்கப் பணி அமைப்பாளர், கருகம்பனை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர், வேறும் சைவப் பிரமுகர்கள் பலர் இடம்பெற்றிருந்தனர். இவர் கீரிமலைக்கு நாவலர் சிலையை வரவழைப்பதற்காக இறுதிவரை மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்காமை கண்டு பெருவேதனையும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

வ. செல்லையா,
தலைவர்
அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம்.

0 0 0

## அறுபத்துமூவர் ஆலயம்

ஐயா,

தங்கள் 24-6-69 செவ்வாய்க்கிழமை இதழில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் அமைக்கப்பட...

உலகம் நன்றிகூறுகிறது.

தொண்டர்சீர்பரவும் பணியைத் தலையாய சிவப்பணி எனக்கொள்ளும் சைவப்பெருமக்கள் இத்தொண்டிற்குப் பேராதரவு நல்கத் திரண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையுடையோம்.

ஈழத்தமிழ் நிலத்தின் புராதனச் சிவன்கோவிலான வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் அறுபத்துமூவர் ஆலயம் அமையவேண்டும் என்றும், அது இல்லாதது யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களுக்கு ஒரு குறை என்றும் கருதி இப்பணியைத் தொடங்கமுன்வந்தது யாழ்ப்பாணம் மெய்கண்டார்கழகம். இத்திருப்பணியின் அவசியத்தைப் பல பெருமக்கள் உணர்ந்து மெய்கண்டார் கழகத்துக்கு உதவ முன்வந்துள்ளார்கள். சிலர் உதவியும் உள்ளார்கள் என்பதை நன்றியுடன் தெரிவிக்கக்கடமைப்பட்டுள்ளோம்.

க. சிவராமலிங்கம்,
செயலாளர்,

# ஐயரான் எழுதுவது

யாழ்ப்பாணம் வின்ஸர் தியேட்டரில் ஓடும் 'திருமால்பெருமை' படம் நன்ருக இருப்பதாயும் அதை அவசியம் பார்க்க வேண்டுமென்றும் ஓர் அன்பர் சொன்னர்.

ஆனால் சில நாட்களுக்கு முன் அப்படத்தைப் பார்த்த மற்றோர் அன்பர், அதில் ஆபாசங்கள் இருப்பதாகச் சொன்னர். இதைப்பற்றிக் கேட்டதற்கு, சில இடங்களில் உடலில் சில பகுதிகள் தெரியும்படி இருந்தும் அது நமது தாய் என்று நினைத்துக் கொண்டால், அது ஆபாசமாகத் தோன்றாதெனும், எல்லாம் நமது மனப் பான்மையைத் தான் பொறுத்தது என்றும் அவர் சொல்லிவிட்டு, பாபநாசம் சிவன் நடித்த பக்தகுசேலா படத்தையும், பக்ததுகாராம் படத்தையும் பார்க்கத் தமக்கு ஆவலாக இருப்பதாயும் அதில் கேட்ட பக்திப் பாடல்கள் தம் செவிகளில் ஒலிப்பதாகவும் கூறி, பாண்டுரங்கனைப்பற்றிய அப்பாடல்களை மெதுவாகப் பாடவும் செய்தார்.

'ஆலயம்' என்ற படமும் நன்ருக இருப்பதாயும், கட்டாயம் பார்க்க வேண்டுமென்றும் ஒருவர் கூறவே மறுநாள் அதைப் பார்க்க வேண்டுமென்று இருந்தேன். அப்படத்துக்குக் கூட்டமில்லை என்றும் ஆகவே அதை மாற்றிவிட்டதாகவும் அறிய ஏமாற்றமாக இருந்தது. இவ்விதமான நல்ல படங்களுக்கு பொதுமக்களின் ஆதரவு குறைவாக இருப்பது வருத்தப்படதக்கதாகும். இவ்வித நல்ல படங்களை சமூகத்துக்காக வாங்கி கோவில் முகலிய பொது இடங்களிலாவது குறைந்த கட்டணங்கள் வைத்துக் காட்ட ஏற்பாடு செய்ய முடியாதா?

பொதுஜன ஆதரவில்லை என்ற காரணத்தால் நல்ல படங்களை மூலையில் முடக்கி புதைத்து வைத்து விடுவது எவ்வளவு பெரிய நட்டம்?

0 0 0

யாழ்ப்பாணத்திலே நல்ல ருசியான மாம்பழங்களை மலிவாக வாங்கலாமென்று கொழும்பிலிருந்து வந்த ஓர் அன்பர் இங்கு மார்க்கெட்டுக்குச் சென்று விசாரித்தார். நல்ல பழம் 65 சதமென்றார்களாம். கொழும்பிலே இது 50 சதத்துக்குக் கிடைக்கிறதாம். யாழ்ப்பாணத்துப்பழம் இங்கு கொழும்பைவிட அதிக விலை விற்பது உண்மையாயின் அது அநியாயம்.

ஓர் எச்சில் மாங்கொட்டையைபூமியில்போட்டால், அது செடியாகி மரமகி வருடாவருடம் கணக்கின்றிக் காய்க்கிறது. இங்குள்ள எளிய மக்களும் சாப்பிடும் படிதான் கனிகளை மரங்கள் மூலம் கடவுள் தருகிறார் ஆனால் பழங்களின் விலை மிக அதிகமிருப்பின் அதை எளிய மக்கள் எப்படி வாங்கி சாப்பிட முடியும்? பணக்காரருக்கு மட்டும்தான் மரங்கள் காய்க்கின்றனவா?

எப்படியும் கொழும்பை விட, யாழ்ப்பாணத்துப் பழங்கள் இங்கு மலிவாகக் கிடைக்க ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகும். யார் இதைச் செய்யப் போகிறார்கள்?

0 0 0

சித்தத்துருகிச் சிவபிரானென்று சிந்தையுள்ளே,
பித்துப் பெருகப் பிதற்றுகின்றார் பிணி தீர்த்தருளாய், மத்தத்தரக்கன் இருபது தோளு முடியுமெல்லாம், பத்துற்றுற நெரித்தாய் எம்மையாளும் பசுபதியே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல சிக்கல்கள் நீங்கக்கூடும். இன்று கோயில்களில் சமூகத்துக்குத் தேவையான பணிகள் நடைபெருமல் எல் காட்டிய வழியில் காரியம் செய்வதே, அவருக்கு உண்மையில்செலுத்தும் அஞ்சலியாகும்.

## ஆசியா "கூட்டுகள்"

"புலிக்கு பயந்தவரெல்லாம் என்மீது படுங்கள்" என்று ஒருவன் சொன்னதாகக் கதையுண்டு. அதுபோல "புது சீனத்தைக் கண்டு பயப்படும் ஆசிய நாடுகள், கூட்டு சேருங்கள், உங்களுக்கு உதவுகிறேம்' என்றுஒருபுறம் ரஷ்யாவும் மறுபுறம் அமெரிக்காவும் முயன்று வருகின்றனவாம்

இரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா இவை ஒரு கூட்டணியில் சேரவேண்டுமென்று ரஷ்யா முயலுகின்றது. இதே சமயம் அமெரிக்காவும் ஆசிய கூட்டணியை அமைத்து அதற்கான ஆயுத உதவிகள் அளிக்க முன்வந்துள்ளதாக விஷய மறிந்த அமெரிக்கரான செஸ்டர் பவுல்ஸ் தெரிவிக்கின்றுர். இம்முயற்சிகள் எவ்வளவு தூரம் கைகூடுமென்பதைக் கூறுவதற்கில்லை.

ஆனுல் நம் இலங்கையைப் பொறுத்தவரை, இவ்வித கூட்டணிகள் எதிலும் சேராமல் ஒதுங்கி இருப்பதே நன்மையாகும். புது சீனம் உள்ளிட்டு எல்லா நாடுகளுடனும் இலங்கைக்கு நல்ல உறவுகள் இருந்து வருகின்றன, வல்லரசுகளுக்கிடையே என்ன போட்டிகளிருப்பினும், அதில் சிக்காமல், யாரையும் பகைத்துக் கொள்ளாமல் இருப்பதே இலங்கை பின்பற்றக் கூடிய தீர்க்கதரிசனமான வழியாகும்.

### கப்புது—குயிலங்கன்றடி வீதி

# சிரமதானத்தில் உடுப்பிட்டி தொகுதி பாடசாலைகள்

கரவெட்டி, வியாழன்

உடுப்பிட்டித் தொகுதி மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உபயோகமான கப்புது குயிலங்கன்றடி ரேட்டு வேலை சிரமதான மூலம் அமைக்கப்பட்டுவருகிறது. நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் 10-வது நாள் வேலையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் ஆரம்பித்து வைப்பார்.

உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம், வித்தியாதிபதி எஸ். தணிகசலம், உதவி ஸ்தலஸ்தாபன அதிகாரி ஏ. யோசேப், கமத்தொழில் உதவி ஆணையாளர் கே. சபாரத்தினம், வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன், பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு. என். நடராசா, உடுப்பிட்டி கி. ச. தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், திருவாளர்கள் வி. கே. சுப்பிரமணியம், ஜே. ஜே. தேவசகாயம் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

சிரமதான வேலையில் சாவகச்சேரி றிபேக்கல்லூரி, இந்துக்கல்லூரி, புலோலி வேலாயுதம் கல்லூரி, கரவெட்டி திருஇருதயக் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, கப்புது தமிழ்க் கலவன் பாடசாலை, நெசவு நிலையம், தையல் நிலையம், கமக்காரர்கள், பயிர்ச்செய்கைக் குழுக்கள், கி. மு. சங்கம் ஆகியன பங்குபற்றவிருக்கின்றன.

ஆசிரியர் ஏ. தில்லையம்பலம், கிராமசேவையாளர் கே. வேலாயுதபிள்ளை, கி. மு. ச. காரியதரிசி க. வேலாயுதம், சிரமதான வேலைக் காரியதரிசி க. சின்னத்தம்பி ஆகியோர் இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இவ்வீதி அமைக்கப்படுவதால் மாரிகாலத்தில் இப்பகுதி மக்கள் அனுபவித்து வந்த கஷ்டங்கள் நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதாலேயே இவ்வீதி அமைக்கப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு [illegible] ஜுன் மாதம் 26ம் [illegible] வெளியிடப்பட்டது.

கையை அர்ப்பணித்த நாவலர் பெருமானது உரைநடை இலக்கிய வரலாற்றிலே தில் உரையாசிரியர்களின் உரைநடைபோன்ற கடின உரைநடையைச் சிலவிடங்

# நாவலரின் சிலை காணல் நாம்காட்டும் கடன்போதா

முசு. கதிர்காமத்தம்பி
(மேலைப்புலோலி)

ஓராறு முகம்கொண்டு ஒளிர்கின்ற நல்லையிலே
பேராறு முகம்கொண்டு பெருவள்ளல்
தமிழ் மன்னன்
சீராறு முதுகுரவர் சிவகாமி கந்தப்பர்
பேரேறு எனவாழப் புகழ்கொண்டு
தோன்றினனே.

கன்னித் தமிழ்கற்முன் கல்விக்கடல் அனையான்
பின்னை உலகமொழி ஆங்கிலமும் தான்கண்டான்
சென்னிப் பிறைசூடி சேவைமொழி சமஸ்கிருதம்
என்னிப் பாரில்மொழி மூன்றினிலும் கைவந்தான்.

ஆண்டில் இளைய ஆறுமுகம் தமிழ்கண்டு
வேண்டி விழைந்தார் வேதமொழி பேர்சிவலும்
கீண்டிச் சிலுவையிட்ட கிறிஸ்து பைபிளினை
கண்டி தமிழில் என்றுர் கற்றவர்கள்
கனிந்தேத்த.

மாடு மனைவி மக்கள்சுகம் நீர்க்குமிழி
தேடு உலகசுகம் அத்தனையும் தேய்மதியாம்
நாடும் உலகும் நற்றமிழும் சைவமுமே
கூடும் பொருளும் குறியுமெனக் கொண்டாரே

பெற்ற மதம்செத்து பிறந்தமொழி பேணுமல்
சுற்று மதம்கற்று சுகந்தேடி அலைவாரை
வெற்று மதம் எல்லாம் வேற்றுமதம் என்றமுத்தி
ஊற்ற மதம் சைவம் உயர்நீதி தமிழ் என்றுர்

சைவம் தளர்ந்து தமிழ் குனிந்த வேளையிலே
கைவந்த பேச்சால் கவின் 'பிரசங்கம்' செய்தார்
மெய்நொந்த போதும் மேலும் பணி ஓங்க
தெய்வந் துணைதரவே செயல்வீரர் ஆனுரே.

கண்டனங்கள் செய்தார் கட்டுரைகள்
தான் வரைந்தார்
கண்டவர்கள் அஞ்சக் கடமைவழி நின்றெழுகி
விண்டதெல்லாம் மெய்யாக வித்தகர்கள்
விரைந்தேற்க
மிண்டர்களுக் கெல்லாம் மிதவாதம்
செய்துவந்தார்.

பண்டிதரின் பொக்கிஷமாய் பாட்டாய்
இருந்ததெல்லாம்
கண்டினிது கற்றிடவே ஆக்கிவைத்தார்
வாக்கியமாய்
கொண்டினிது கற்கவென்றுர் சைவவினு
விடையெல்லாம்
தொண்டினது பெருமைக்கு அவரன்றே
ஒளிவிளக்கு.

கல்வி வளரவென்று கலைச்சாலை பல அமைத்தார்
செவ்வி குன்றுமல் நிதிமிகவும் சேர்த்துவைத்தார்
இம்மியும் பிழையின்றி இருந்தமிழை அச்சேற்றி
செம்மையுற வைத்தார் செந்தமிழின்
உயிர்ச்செம்மல்.

நாவலரின் புகழ்சொல்ல நாவோராயிரம்
போதா
நாவலரின் தமிழ்கற்க நாம் வாழும்நாள் போதா!
நாவலரின் சிலைகாணல் நாம் காட்டுகடன் போதா!
நாவலரின் வழிநிற்றல் போது (ம்) மற்றவை
போதா!

எனினும் நாவலருடன் தொடர்புடைய நாவலரால் தொடக்கப்பட்ட சிவன்கோயிலிலுள்ள புண்ணியதலமான கீரிமலைக்கு நாவலர் சிலை ஊர்வலம் வரமாட்டாது என்பதறிந்து இப்பகுதி மக்கள் பெரிதும்

ஐயா,

தங்கள் 24-6-69 செவ்வாய்க்கிழமை இதழில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் அமைக்கப்பட இருக்கும் அறுபத்துமூவர் ஆலயம்பற்றி விதந்து ஐயா றனில் எழுதியமைக்கு சைவ

யும் உள்ளார்கள் என்பதை நன்றியுடன் தெரிவிக்கக்கடமைப்பட்டுள்ளோம்.

க. சிவராமலிங்கம்,
செயலாளர்,
மெய்கண்டார் கழகம்.
411, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

பது தோளு முடியுமெல்லாம், பத்துற்றுற நெரித்தாய் எம்மையாளும் பசுபதியே.

— அப்பர் அடிகள்

### 'ஈழநாடு' பத்தாண்டு நிறைவு விழா — மரதன் ஓட்டம்

# 'மரதன்' ஓட்டப் போட்டியிலும் சகோதரபாசத்தைக் கண்டோம்

['ஈழநாடு' பத்தாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற 26 மைல் 385 யார் மரதன் ஓட்டத்துக்குப் பொறுப்பாகவிருந்தவர் யாழ்ப்பாணம் ராக் அன்ட் பீல்ட் இளம் செயலாளரான திரு. வி. ரி கணேசலிங்கம். இப்போட்டி சம்பந்தமாக அவர் தெரிவித்த ருசிகரமான தகவல்களை இங்கு கட்டுரை வடிவில் தருகின்றுர் நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம்.]

மரதன் ஓட்டம் என்றுல் அது 26 மைல் 385 யார் தான். இதற்குக் குறைந்த தூர ஓட்டங்கள் மரதன் ஓட்டம் அல்ல. அவைகளைச் சாதாரணமாக 'றேஸ்' என்றுதான் சொல்ல முடியும். மக்கள் மனதில் மரதன் பற்றி தவருன கருத்துக்கள் நிலவிவந்த வேளையில் "ஈழநாடு" இந்தப் போட்டியை வைத்ததன் மூலம் வீரர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமன்றி விளையாட்டுலகில் ஒரு புரட்சியையும் உண்டுபண்ணியுள்ளது.

பல்வேறு பத்திரிகைகளும் தங்கள் விழாக்களைக் கொண்டாடுகையில் கொடுக்காத முக்கியத்துவத்தை 'ஈழநாடு' பத்திரிகை தனது பத்தாண்டு நிறைவுக்கொண்டாட்டத்தில் விளையாட்டுக்குக் கொடுத்தது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். இதற்கு விளையாட்டுக்கழகங்கள் முதலில் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டவை.

பல்வேறு விளையாட்டுக்களையும் வருடம்தோறும் நடத்தும் விளையாட்டுக் கழகங்களும் மரதன் ஓட்டத்தை நடாத்த முன்வராமலிருப்பதன் காரணம் என்ன? வரவில்லாமல் செலவால் நடைபெறும் ஒரு விளையாட்டு இது என்பதாலும், அலைச்சலும் தொல்லையும் தான் இதனுல் மிஞ்சுவது என்ற அபிப்பிராயமும் இருப்பதினுல்தான் இந்த நிலைமாறவேண்டும். மாற்றப்படவேண்டும். இதைத்தான் 'ஈழநாடும்' செய்திருக்கின்றது என்று துணிந்து கூறலாம்.

### 27 பேர்

இப்போட்டியை முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ராக் அன்ட் பீல்ட் கிளப் 1963 ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடாத்திய போது 12 வீரர் மட்டும் கலந்து கொண்டனர். 1964-ம் ஆண்டு இரண்டாம் தடவை நடாத்திய போது 17 பேர் மட்டும் கலந்துகொண்டனர். பின்னர் இப்போட்டி நடைபெறவேயில்லை. இவ்வருடம் ஈழநாடு' யாழ். மாவட்ட வீரர்களுக்கென நடாத்தியபோது 27 பேர் கலந்துகொள்ள முன்வந்ததே இதற்கு ஒரு பெரு வெற்றி எனலாம்.

### வைத்திய சோதனை

இப் போட்டியில் வைத்தியசோதனை, பரிசோதனை, உணவுவகைகளை வீரர்களுக்கு வழங்குதல் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்த வேண்டும். போட்டி ஆரம்பமாகி பத்தாவது மைலில் முதலாவதாக குளிர்பானமும், பின்னர் 5 மைல்களுக்கு ஒரு தடவையுமாக வழங்கவேண்டியது மிக அவசியமாகும்.

'ஈழநாடு' மரதன்போட்டி இந்த விதிகளை நன்கு அனுசரித்து நடத்தப்பட்டதென்பதையும், வீரர்களுக்கு ஒரு படிப்பினையை இது புகட்டியுள்ளதென்பதையும் முதலில் இங்கு கவனிக்க வேண்டும்.

27 போட்டியாளர்களையும் யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். அருணசலம் வைத்திய சோதனைசெய்து பின்வரும் 21 பேரை மட்டும் போட்டியில் கலந்துகொள்ள அனுமதித்தார்.

பி. எஸ் ஆறுமுகம், கோப்பாய்; ஆர். ஸ்ரீஸ்கந்தராஜா, வல்வெட்டித்துறை, எஸ். சுப்பிரமணியம், அளவெட்டி; கே. சித்தார்த்தன், திருநெல்வேலி: கே. சித்தரஞ்சன், திருநெல்வேலி; எஸ். ஆனந்தராஜா, திருநெல்வேலி; வி. சபாநாதன், திருநெல்வேலி; எஸ். லோகநாதன், திருநெல்வேலி; எஸ். தயாரஞ்சன், மானிப்பாய், கே. பொன்னம்பலம், யாழ்ப்பாணம், எஸ். கனகசபாபதி, கோப்பாய், எம். சண்முகநாதன், கொட்டடி ஜே. ஏ. ஐசையா, யாழ்ப்பாணம், ஐ. பரமேஸ்வரன், சாவகச்சேரி, எஸ். ஜீவரத்தினம், யாழ்ப்பாணம், பி. கனககுலசிங்கம், பண்டத்தரிப்பு, ஆர். இராஜேந்திரம் பண்டத்தரிப்பு, ஆர். திருநாவுக்கரசு, பண்டத்தரிப்பு, எஸ். சாம்பசிவமூர்த்தி, தெல்லிப்பழை, கே. எஸ். வேலுப்பிள்ளை, செம்பியன்பற்று, எஸ். இராமச்சந்திரன், தொண்டைமானாறு.

14-ம்திகதிககாலை6மணி ஈழநாடு வாசலில் போட்டி ஆரம்பமாகிலிட்டது.

### சகோதரர்கள்

முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசோதனையிடங்களில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஆர். இராஜேந்திரம் என்றவர் முன்னணியில் சென்றுகொண்டிருக்கிறுர். இரண்டாவதாக அவரது கூடப்பிறந்த சகோதரரான ஆர். திருநவுக்கரசு சென்றுகொண்டிருககின்றுர். போட்டி கேகே எஸ் வீதி வழியாக வந்து ஸ்ரேடியம் மைதானத்தை நெருங்குகின்றது.

திரும்பிப் பார்க்கின்றுர் தம்பி இராஜேந்திரம். அண்ணரான திருநாவுக்கரசு பின்னுல் 'வந்துகொண்டிருக்கின்றுர். சிறிதுகூடிய இடைவெளிக்குப் பின்னுல்தான் மூன்றுவதாக தெல்லிப்பழையைச் சேர்ந்த சாம்பசிவமூர்த்தி வந்துகொண்டிருககிறுர்.

அண்ணனுடன் போட்டியிட தம்பி விரும்பவில்லை. சற்று மெதுவாக ஓடி அண்ணை முந்திச்செல்ல விடுகின்றுர். முடிவில் அண்ணனுக்கு முதலிடம், தம்பிக்கு இரண்டாமிடம். முதலிடத்துக்காக அண்ணன் திருநாவுக்கரசுவுக்கு ட்ரான்சிஸ்டர் ரேடியோவும், தம்பியான இராஜேந்திரத்துக்கு இரண்டாம் பரிசாக கைக்கடிகாரமும், மூன்றுமிடத்தைப் பெற்ற சாம்பசிவமூர்த்திக்கு வெள்ளி 'றே'யும் வழங்கப்பட்டது. சகோதர பாசம்தான் என்னே!

### ஓடி முடித்தவர்கள்

போட்டிப் பாதையை ஓடி முடித்த பரமேஸ்வரன், ஆறுமுகம், கனகசபாபதி. ஸ்ரீஸ்கந்தராஜா, சபாநாதன், இராமலிங்கம், வேலுப்பிள்ளை ஆகியோருக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

போட்டிக்கான ஒழுங்குகளைக் கவனித்ததாடு, மத்தியஸ்தர்களாகவும் திருவாளர்கள் இ. சபாலிங்கம், கே. வி. தனேஸ்வரன், கே. எம். எஸ், ஹமீட், எஸ். இரத்தினம், ரி. விசாகராஜா, டாக்டர் ஜே. ஸி. துரைசிங்கம் ஆகியோர் கடமையாற்றினுர்கள்.

இப்போட்டியை 'ஈழநாடு' வருடம்தோறும் நடத்துவதோடு, அகில இலங்கை ரீதியாகவும் நடத்தினுல் சிறந்த பலவிளையாட்டு வீரர்களை உருவாக்கும் பெருமை இதனையே சாரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org